653
2-53

நெல்லைத் தமிழ் வாசகம்



4

வித்துவான்
ப. ஆறுமுகப் பெருமாள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUN 1953
MADRAS

TB
031 (4)
N53
86809.

...ரமணிய பிள்ளை, திருநெல்...

653
2-53.

நெல்லைத்
தமிழ் வாசகம்

நான்காம் வகுப்பு

BOOKS OF THE REGISTRAR OF BOOKS
31 JUN 1953
MADRAS

வித்துவான் ப. ஆறுமுகப் பெருமாள்,
தமிழ் ஆசிரியர்,
மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்துக் கலாசாலை,
திருநெல்வேலி.

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்ஸ் : : திருநெல்வேலி

காபிரைட்] [விலை அணா 8

முதற் பதிப்பு—1948
இரண்டாம் பதிப்பு—1949
மூன்றாம் பதிப்பு—1953

பாடப் புத்தகக் கமிட்டி அங்கீகரித்தது.
பக்கம் 21, கெஜட் 13-5-53.

86809

Kabeer Printing Works, Madras (2214)

முன்னுரை

'நெல்லைத் தமிழ் வாசகம்' என்னும் இப்புத்தக வரிசை தற்போது அமுலிலிருக்கும் தமிழ்ப் பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் பார்த்துப் பழகிய பொருள்கள் பற்றிய பாடங்களும், நீதிநெறி, உலக அறிவு, இயற்கைப் பொருள் ஞானம், சமூக சுகாதாரம் இவற்றைப் புகட்டக் கூடிய பாடங்களும், உற்சாக மூட்டும் கதைகளும் இவ்வரிசையில் எழுதப்பட்டுள்ளன. பாடங்கள் படிக்கிரமமாக அமைக்கப் பட்டிருப்பது மன்றி அவ்வப் பாடங்களுக்குரிய பாடங்கள் பலவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தவிர, அங்கங்கே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளும், பயிற்சிகளும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுவனவாம்.

ஆகவே, இப்புத்தகங்கள் மாணவர்களுக்கு நமது கல்வி இலாகா அதிகாரிகள் கொடுக்க விரும்பும் மொழி அறிவை எளிதில் கொடுக்குமென்று நம்புகிறேன்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

பாடம்	விவரம்		பக்கம்
1.	தமிழ் நாடு	...	1
2.	ரோஜா	...	5
3.	'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்'	...	8
4.	நிறுத்தக் குறிகள்	...	13
5.	சூரியன்	...	16
6.	வேம்பு	...	19
7.	வேதநாயகம் பிள்ளை	...	23
8.	தாய் தந்தையரை வணங்குதல்	...	28
9.	காட்டு மிருகங்கள்	...	30
10.	'துஷ்டரைக் கண்டால் தூர விலகு'	...	34
11.	திருவள்ளுவர்	...	38
12.	பூமி	...	42
13.	காப்பிக்கொட்டை	...	46
14.	ஓநாயும் கொக்கும்	...	50
15.	நெருப்பு	...	53
16.	பறவைக் கூடு	...	59
17.	மழை	...	63
18.	வௌவால்	...	67
19.	அதிவீரராம பாண்டியர்	...	70
20.	கோழி வளர்த்தல்	...	73
21.	மண் எண்ணெய்	...	79
22.	தேசிங்கின் வீரச்செயல்	...	82
23.	தல நிர்வாகம்	...	86
24.	நோயற்ற வாழ்வு	...	91
25.	எங்கள் உல்லாசப் பிரயாணம்	...	95
26.	கடிதம் எழுதும் முறை	...	102
27.	தந்தையின் அன்பு	...	106
	செய்யுட் பகுதி	...	113
	குறிப்புரை	...	121

நெல்லைத் தமிழ் வாசகம்

நான்காம் வகுப்பு

1. தமிழ் நாடு

தமிழகம்	ஆத்தி	நாகரிகம்
கன்னியாகுமரி	சிற்றரசர்	ததும்ப
நாளடைவில்	சங்கம்	பரிசில்
கவர்ந்தன	தென்மதுரை	ஆதரித்து
அடையாளம்	கபாடபுரம்	அகழ்

1. பிள்ளைகளே, தமிழ் பேசப்படும் நாடாகிய நமது நாடு தமிழ் நாடு அல்லது தமிழகம் எனப்படும். இந்த நாட்டின் வடக்கெல்லை திருப்பதி மலை; தெற்கெல்லை கன்னியாகுமரி; கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் எல்லைகளாக இருந்தன. நாளடைவில் தமிழிலிருந்து மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகள் தோன்றின. அவைகள் தமிழ் நாட்டின் சில பகுதிகளைக் கவர்ந்தன.

2. இந்தத் தமிழ்நாடு முடியுடை மூன்று அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்தது. இவர்கள் சேர, சோழ, பாண்டியராவர். இவர்கள் முறையே வஞ்சியிலும், உறையூ

ரிலும், மதுரையிலும் இருந்து ஆண்டு வந்தனர்.

3. இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாலையையும், கொடியையும் அடையாளமாகக் கொண்டனர். சேர அரசன் பனந்தோட்டு மாலையையும், சோழ அரசன் ஆத்தி மாலையையும், பாண்டிய அரசன் வேப்ப மாலையையும் அணிந்து கொண்டனர். சேரன் வில்லையும், சோழன் புலியையும், பாண்டியன் மீனையும் தத்தம் கொடிகளில் அடையாளமாகக் கொண்டனர். இவ்வரசர்களின் கீழ் பல சிற்றரசர்களும் தமிழ் நாட்டின் சில பாகங்களை ஆண்டு வந்தனர்.

4. இத் தமிழரசர்கள் தமிழை வளர்க்க மூன்று தமிழ்ச் சங்கங்கள் ஏற்படுத்தினர். அவைகள் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்பனவாம். இவற்றில் முதற் சங்கம் தென் மதுரையிலும், இடைச் சங்கம் கபாடபுரத்திலும், கடைச் சங்கம் மதுரையிலும் கூட்டப்பட்டன. இச்சங்கங்களில் அரசர்களும் புலவர்களாக இருந்தனர். கடைச் சங்கத்துப் புலவர்களில் முக்கியமானவர்கள் மாங்குடி மருதனார், நக்கீரனார், கபிலர், பரணர் என்பவர்கள்.

5. நம் தமிழ் நாடு முன்னாளிலே மிக்க நாகரிகம் வாய்ந்த நாடாயிருந்தது. புலவர்

கள் நாடெங்கும் பரவிச் சொற்சுவை, பொருட் சுவை ததும்பும்படி பாடி வந்தனர். அரசர் களும் அவர்களுக்குத் தக்க பரிசில் கொடுத்து ஆதரித்து வந்தார்கள். தவிர, தமிழர்கள் ஓவியக்கலை, சிற்பக்கலை முதலியவற்றிலும்



சிறப்புற்று விளங்கினுர்கள். நமது முன்னேர் எழுதிய சிறந்த சித்திரங்களில் சில தஞ்சைப் பெரிய கோவிலிலும் மற்றும் சில கோவில் களிலும் காணப்படுகின்றன.

6. நம் தமிழ் நாட்டினர் சீனம், எகிப்து, கிரீஸ், பாரசீகம் முதலிய நாடுகளுடன் வர்த் தகம் செய்து செல்வர்களாய் தமிழகத்தைப் பொலியச் செய்தனர். தமிழ் நாட்டின் ஒவ்

வொரு நகரத்தையும் அழகிய கோவில்களும், பலவகைக் கோட்டைகளும், அகழ்களும், கடை வீதிகளும், மாடங்களும் அழகு செய்வித்தன. தமிழ் நாட்டுப் பெண்மணிகள் வீரம், கல்வி, பக்தி இவைகளிற் சிறந்து விளங்கினர். தமிழர் புகழ் எங்கும் பரவியிருந்தது.

7. இவ்வளவு புகழ் நிறைந்த தமிழகத்திற் பிறக்கும் பெருமை நமக்குக் கிடைத்திருக்கிறது. நாம் நம் முன்னோரைப் போன்று புகழுடன் விளங்க வேண்டுவது நமது கடமை.

கேள்விகள்

1. தமிழ் நாடு என்பது எது? அதன் எல்லைகள் எவை?
2. இத் தமிழ் நாட்டை ஆண்ட அரசர்கள் யார்? அவர்களின் அடையாள மாலையும் கொடியும் எவை?
3. கடைச் சங்கப் புலவர்களில் முக்கியமானவர்கள் யார்?
4. தமிழ் நாட்டின் புகழைப் பற்றி நீ படித்தவற்றை எழுதுக.

பயிற்சி

1. கவர்ந்தனர், ததும்பின, விளங்கின—என்னும் சொற்களைத் தனித்தனியே உனது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
2. முடி—இரு பொருள் கூறுக.
3. பெருமை—எதிர்ப்பதம் என்ன?



2. ரோஜா

விளங்குவது	பெரும்பாலும்	செல்வர்கள்
சிறந்தது	பனிநீர்	சக்கரவர்த்தி
பெயர்பெற்று	நண்பர்	விவாகம்
ஏராளமாக	உபசரி	தைலம்

1. அழகிலும் வாசனையிலும் பூக்களின் ராஜாவாக விளங்குவது ரோஜாப் பூ. இது நாட்டிலும் காட்டிலும் கிடைக்கும். ஆனால் காட்டு ரோஜாப் பூவைக் காட்டிலும் நாட்டில் உண்டாகும் ரோஜாப்பூவே சிறந்தது.

2. ரோஜாப் பூக்களில் பலவகை உண்டு. நிறம், உருவம், வளர்ச்சி, வாசனை, பூக்கும் காலம் முதலியவற்றைக் கவனித்து ரோஜாக்

களைப் பல ஜாதிகளாகப் பிரித்திருக்கின்றார்கள். நமது சென்னை மாகாணத்தில் பெயர்பெற்று விளங்கும் ரோஜாவை **எட்வர்ட் ரோஜா** என்று சொல்லுகிறார்கள். இது நன்றாக வளர்ந்து ஏராளமாகப் பூக்கிறது.

3. சில ரோஜாக்கள் வெள்ளையாகவும், சில சிவப்பாகவும், சில மஞ்சளாகவும் இருக்கின்றன. ரோஜா பெரிய மரமாக வளர்வதில்லை. இது பெரும்பாலும் செடியாகவே உண்டாகிறது. ரோஜாச் செடியில் முட்கள் உண்டு. ரோஜாப் பூக்களை மாலையாகவும் செண்டாகவும் கட்டலாம். ரோஜாப் பூக்களிலிருந்து பனிநீர் உண்டாக்கலாம். விசேஷ காலங்களில் நாம் நமது நண்பர்களின்மேல் பனிநீர் தெளித்து அவர்களை உபசரிக்கிறோம்.

4. நல்ல பனிநீரிலிருந்து அத்தர் செய்யலாம். ஒரு ரூபாய் எடை அத்தர் எடுப்பதற்குச் சுமார் லட்சம் ரோஜாப் பூக்கள் வேண்டும். ஆகையால் அத்தர் அதிக விலையுள்ளது. செல்வர்கள் இதை வாசனைக்காகப் பூசிக்கொள்கிறார்கள்.

5. பல வருஷங்களுக்கு முன் டில்லி நகரத்தில் ஓர் அழகிய மகாராணி இருந்தாள். அவளுடைய புருஷன் அக்காலத்தில் இந்தியாவின் சக்கரவர்த்தியாக இருந்தான். அவர்களுடைய விவாகம் நடந்தபொழுது விருந்து

மண்டபத்தில் பனிநீர் ஓடும் வாய்க்கால்களை அமைத்தார்களாம். அரண்மனையைச் சேர்ந்த தோட்டத்தில் ஒரு பெரிய தொட்டியைப் பனி நீரால் நிரப்பி வைத்தார்களாம்.

6. இரண்டு தினங்கள் கழிந்தபின் பனி நீர் வாய்க்காலிலும் பனிநீர்த் தொட்டியிலும் ஒருவிதமான தைலம் மிதப்பதை ராணி கண்டாள். அதை அவள் சோதனை செய்து பார்த்தாள். அது 'கம்' என்று வாசனை வீசியது. அந்த வாசனையை அதற்கு முன் அவள் உணர்ந்ததே இல்லை. இந்த வாசனைப் பொருள் தான் **அத்தர்** என்ற பெயரால் இப்பொழுது வழங்குகிறது.

7. நல்ல ஜாதி ரோஜாச் செடிகள் இப்பொழுது டில்லி, கல்கத்தா, உதகமண்டலம், பெங்களூர் முதலிய இடங்களிலுள்ள சர்க்கார்த் தோட்டங்களிலும் வேறு தோட்டங்களிலும் வளர்க்கப்படுகின்றன.

கேள்விகள்

1. சென்னை மாகாணத்தில் பெயர் பெற்று விளங்கும் ரோஜா எது ?
2. ரோஜாப் பூக்களால் என்ன உபயோகம் ?
3. அத்தர் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றைக் கூறு.

பயிற்சி

1. மாலை—இரு பொருள் கூறு.
2. செல்வர்கள்—எதிர்ப்பதம் எழுது.

இலக்கணம்

செல்வர்கள் அத்தரை வாசனைக்காகப் பூசிக்கொள்கிறார்கள்.—இது ஒரு வாக்கியம். இதில் 'பூசிக்கொள்கிறார்கள்' என்பது ஒரு செயல் முடிந்ததைக் காட்டுகிறது. இது வினை முற்று; ஒரு வாக்கியத்தில் வருகிற முற்றுவினை பயனிலை ஆகும்.

யார் பூசிக்கொள்கிறார்கள்? செல்வர்கள் பூசிக்கொள்கிறார்கள். 'செல்வர்கள்' என்னும் வார்த்தை எழுவாய். ஒரு வாக்கியத்தில் ஒரு செயலைச் செய்கிற பொருள் எழுவாய் ஆகும்.

செல்வர்கள் எதைப் பூசிக்கொள்கிறார்கள்? செல்வர்கள் அத்தரைப் பூசிக்கொள்கிறார்கள். 'அத்தரை' என்பது செயப்படுபொருள்.

குறிப்பு:—ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை உண்டு. செயப்படுபொருள் சில வாக்கியங்களில் இருக்கும், சில வாக்கியங்களில் இராது.

பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுது:—

1. நாம் பனிநீரிலிருந்து அத்தர் செய்யலாம்.
2. சீசாவில் பனிநீர் இருக்கிறது.
3. ரோஜாச் செடியில் முட்கள் உண்டு.

3. 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்'

பாதுகாத்து	கழு	உபாயம்
வைகறை	ஆக்ஞாபித்தான்	உயர் பதவி
ராஜ குமாரி	கவனமாக	இறுமாப்புடன்
விளித்து	காவல் புரிந்து	அறியாவண்ணம்
ஆணை	பொழுது புலர்வதற்கு	நிரூபிக்க
ஏற்பாடு	ஆஜர்படுத்த	நற்புத்தி
காவலாளி	அரண்மனை	தீய காரியங்கள்

1. இரத்தினகிரி என்னும் ஊரில் ஒரு சிற்றரசன் இருந்தான். அவன் ஒரு தோட்டத்தில் பல ஜாதி ரோஜாச் செடிகளை வளர்த்துப்

பாதுகாத்து வந்தான். அவனுக்கு ஒரு மகள் உண்டு. அவள் தினந்தோறும் வைகறையில் எழுந்து, ரோஜாத் தோட்டத்திற்குச் சென்று, பூக்களைப் பறித்துக்கொண்டு திரும்புவது வழக்கம்.

2. இப்படி யிருக்கையில் அத்தோட்டத்தில் சில நாட்களாகப் பூக்கள் களவு போய்க்கொண்டிருந்தன. இதை யறிந்த ராஜகுமாரி விசனமுற்றுத் தன் தந்தையிடம் ரோஜாப் பூக்கள் களவு போவதைத் தெரிவித்தாள்.

3. அரசன் கோபங்கொண்டு, மந்திரியை விளித்து, "நமது ரோஜாத் தோட்டத்தில் சில நாட்களாகப் பூக்கள் களவு போகின்றனவாம். அவ்விதம் பூக்களைத் திருடிச் செல்லுபவரைப் பிடித்து வருவதற்கான ஏற்பாடு செய்க" என்றனன். மந்திரி அரசன் ஆணையைக் காவலாளிகளுக்குத் தெரிவித்து, "எவ்விதத்திலும் திருடனைப் பிடித்துக் கொண்டுவர வேண்டும்" என்று ஆக்ஞாபித்தான்.

4. காவலாளிகள் ரோஜாத் தோட்டத்தைக் காவல் புரிந்து வந்தார்கள். நாலைந்து நாட்கள் ஆகியும் திருடன் பிடிபடவில்லை. தோட்டத்தில் பூக்கள் களவு போய்க்கொண்டே இருந்தன. இதைக் கேள்விப்பட்ட அரசன் மிகவும் கோபங்கொண்டு இன்னும் இரண்டு தினங்களில் திருடன் பிடிபடாவிட்டால்

காவலாளிகளைக் கழுவில் ஏற்றுவிப்பதாகக் கூறினன்.

5. ஆதலின் காவலாளிகள் தோட்டத்தை வெகு கவனமாகக் காவல் காக்க ஆரம்பித்தனர். ஒரு நாள் பொழுது புலர்வதற்கு முன் ஒரு சிறுவன் அரசனுடைய தோட்டத்தில் ரோஜாப் பூக்களைப் பறித்துக்கொண்டு தோட்டத்திற்கு வெளியே வருவது கண்டு ஒரு காவலாளி அவனைப் பிடித்துக் கொண்டான். அவனைக் கையும் களவுமாக அரசனிடம் ஆஜர் படுத்த வேண்டுமென்று நினைத்துக் காவலாளி அவனுடன் அரண்மனையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

6. வழியில் சிறுவனுடைய தந்தை எதிர்ப்பட்டான். சிறுவனைக் கண்டதும் அவன் மனம் திகிலடைந்தது. தன் மகன்தான் குற்றவாளி என்பதைக் கண்டு விசனமுற்றான். ஆயினும் அச்சிறுவன் தன் மகன்தான் என்பதை வெளியில் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். இது சிறுவன் செவிகளிற்பட்டது. உடனே அவன் களவுக் குற்றத்தினின்றும் தப்புவதற்கான உபாயத்தைச் 'சட்' என அறிந்துகொண்டான்.

7. காவலாளி தான் திருடனைக் கையுங் களவுமாகப் பிடித்துவிட்டதால், தனக்கு உயர்

பதவி கிடைக்குமென்று நினைத்து இறுமாப்புடன் வழி நடந்து கொண்டிருந்தான். சிறுவனோ எவரும் அறியாவண்ணம் ஒவ்வொரு பூவாக எல்லாப் பூக்களையும் தின்றுவிட்டான்.

8. காவலாளி சிறுவனை அரசன் முன் நிறுத்தி, "அரசரே, நான் திருடனைக் கையும் களவுமாகப் பிடித்து வந்திருக்கிறேன். திருடப்பட்ட பூக்கள் அவனிடமே இருக்கின்றன. ஆதலின் திருடன் இவன்தான் என்பதை நிரூபிக்க யாதொரு சாட்சியும் தேவையில்லை" என்றான்.

9. சிறுவன் யாது மறியாதவன்போல் அரசனை நோக்கி, "வேந்தே! இக் காவலாளி சொல்வது முழுப்பொய். நான் தோட்டத்தின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தபொழுது இவன் என்னைப் பிடித்து இழுத்துவந்தான். நான் தோட்டத்திற்குள் போகவும் இல்லை; ரோஜாப் பூக்களைத் திருடவும் இல்லை. இவன் கூறுகிறபடி என்னிடம் ரோஜாப் பூக்களும் இல்லை; என்னிடம் இருக்கின்றனவா என்று வேண்டுமானால் சோதித்துப் பாருங்கள்" என்றான்.

10. சிறுவன் கூறியபடி அவனிடம் ரோஜாப் பூக்கள் இல்லாமையால் அரசன் அவனை விடுவித்தான்; காவலாளியைத் தண்டித்தான்.

11. சிறுவன் வீட்டை யடைந்ததும் அவனுடைய தந்தை அவனுக்கு நற்புத்தி கூறினான். சிறுவனும் தான் செய்த குற்றத்தை உணர்ந்து வருத்தப்பட்டான். அன்று முதல் அவன் தீய காரியங்களைக் கனவிலும் நினையாமல் வாழ்ந்து வந்தான்.

கேள்விகள்

1. ராஜகுமாரி ஏன் வருத்தமடைந்தாள்?
2. அரசன் மந்திரியிடம் கூறியது என்ன?
3. மந்திரி காவலாளிக்கு என்ன உத்தரவு இட்டான்?
4. தோட்டத்தில் ரோஜாப்பூக்களைத் திருடிவந்தது யார்?
5. சிறுவன் தண்டனை யடையாமல் தப்புவதற்கு உபாயம் கூறியது யார்? கூறிய உபாயம் என்ன?
6. சிறுவன் தண்டனையின்றித் தப்பியது எவ்விதம்?

பயிற்சி

1. பரி, பறி—அர்த்தத்தில் என்ன வித்தியாசம்?
2. ஆக்ஞாபித்தான்—இதே அர்த்தமுள்ள வேறு மூன்று வார்த்தைகள் எழுது.
3. வழியில், ஓரமாக—வாக்கியங்களில் அமைத்து எழுது.
4. ராஜகுமாரி தினந்தோறும் வைகறையில் எழுந்து ரோஜாத் தோட்டத்திற்குச் சென்று, பூக்களைப் பறிப்பாள்.—இந்த வாக்கியத்தை மூன்று சிறிய வாக்கியங்களாகப் பிரி.

இலக்கணம்

கீழ்க்கண்ட வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எழுது:—

1. காவலாளிகள் தோட்டத்தைக் காத்தார்கள்.
2. காவலாளி சிறுவனைப் பிடித்தான்.
3. நான் தோட்டத்திற்குள் போகவில்லை.
4. தந்தை சிறுவனுக்கு நற்புத்தி கூறினான்.

4. நிறுத்தக் குறிகள்

அவசரமாக	அடையாளம்	நன்று
சுருக்கமாக	இமைக்கும் காலம்	குறிகள்
குறிக்கும்	பூரணமான	தோன்ற

பிள்ளைகளே, நீங்கள் வாசிக்கும்பொழுது நிறுத்தக் குறிகளைக் கவனிக்கவேண்டும். சில பிள்ளைகள் இக்குறிகளைக் கவனியாமல் அவசரமாக வாசிக்கிறார்கள். இதனால் வாசிப்பவர்களுக்கும் வாசிக்கும் பாடத்தின் பொருள் நன்றாக விளங்குவதில்லை; கேட்பவர்களுக்கும் அது நன்கு வெளிப்படுவதில்லை. வாசிக்கும்பொழுது நீங்கள் கவனிக்கவேண்டிய முக்கியமான நிறுத்தக் குறிகள் நான்கு. அவையாவன:—

, இது **காமா** அல்லது காற்புள்ளி. இது எல்லாவற்றிலும் சுருக்கமாக நிறுத்துவதைக் குறிக்கும். பாடங்களின் நடுவில் இந்த அடையாளம் வந்தால் ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். ஒரு தடவை கண் இமைக்கும் கால அளவை **மாத்திரை** என்கிறோம்.

; இது **செமிகோலன்** அல்லது அரைப்புள்ளி. காமாவுக்கும் அடுத்த சுருக்கமான நிறுத்தலைக் குறிப்பது இது.

இதற்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

: இது **கோலன்** அல்லது முக்காற் புள்ளி. செமிகோலனுக்கு அடுத்த நிறுத்தலைக் குறிப்பது இது. இங்கே மூன்று மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

. இது முற்றுப் புள்ளி. இது பூரணமான நிறுத்தலைக் குறிப்பது. இது ஒரு வாக்கியம் முடிந்ததைக் குறிக்கும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்துவது நன்று.

இந்த நான்கு முக்கியமான நிறுத்தக் குறிகளைத் தவிர, வேறு இரண்டு குறிகளும் உண்டு. இவை வினாக் குறி என்றும், ஆச்சரியக் குறி என்றும் சொல்லப்படுகின்றன.

? இதைத்தான் **வினாக்குறி** என்று சொல்கிறோம். வினா என்பது கேள்வி. கேள்வியாக அமைந்திருக்கும் வாக்கியங்களின் முடிவில் இக்குறி காணப்படும். நாம் ஒருவனிடம் கேள்வி கேட்பதுபோல வாசிக்கவேண்டும் என்பது இக் குறியின் பொருள். இக் குறியிட்ட இடத்திலும், முற்றுப்புள்ளி இட்ட இடத்தைப்போல் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

! இதை **உணர்ச்சிக் குறி** என்று சொல்கிறோம். இது ஆச்சரியம், துக்கம் முதலியவற்றைக் குறிக்கும் வாக்கியங்களின் முடிவில் அமைக்கப்படுகிறது.

கேள்விகள்

1. முக்கியமான நான்கு நிறுத்தக் குறிகள் எவை ?

2. நிறுத்தக் குறிகளைக் கவனித்து வாசிக்க வேண்டிய அவசியம் என்ன ?

3. ஒரு மாத்திரை நேரம் என்பது எவ்வளவு?

4. எவ்வகை நிறுத்தக் குறிகளுக்கு எவ்வளவு நேரம் நிறுத்த வேண்டும் ?

5. முற்றுப் புள்ளி, வினக் குறி, உணர்ச்சிக் குறி எச்சமயங்களில் உபயோகப்படுகின்றன ?

பயிற்சி

1. பின் வரும் வாக்கியங்களில் தகுந்த இடங்களில் காற்புள்ளி, முற்றுப் புள்ளி, வினக் குறி, உணர்ச்சிக் குறி இவைகளை அமைக்க :—

(அ) நல்ல ஜாதி ரோஜாச் செடிகள் டில்லி கல்கத்தா உதகமண்டலம் பெங்களூர் முதலிய இடங்களிலுள்ள சர்க்கார்த் தோட்டங்களில் வளர்க்கப்படுகின்றன

(ஆ) ஆ இந்த ரோஜாப் பூ எவ்வளவு பெரியது

(இ) இந்தப் பூவை நீ எங்கே வாங்கினய்

2. முந்தின பாடத்தில் அரைப்புள்ளி வந்துள்ள ஒரு வாக்கியத்தை எடுத்து எழுது.

5. சூரியன்

ஒப்பு	பலகணி	ஒளி
இனிய குரல்	பிரயாணி	தினகரன்
கீழ்வானம்	பரந்த	பகலவன்
கதிர்கள்	பிரயாணம்	ஆரோக்கியம்
மலர்கள்	இளைப்பு	வெப்பம்

1. என் பெயர் சூரியன். என் பிரகாசத்திற்கு ஒப்பு இல்லை. நான் காலையில் எப்பொழுதும் கிழக்கே உதிக்கிறேன். அதிகாலையில் கிழக்கு வெளுக்கும் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? அப்பொழுது சேவல் கொக்-கொக்-கோ என்று கூவுகிறது. சிறிது நேரம் சென்றதும் காகம் கா, கா என்று கரைகிறது. மற்றப் பறவைகளும் இனிய குரலுடன் பாடுகின்றன. அப்பொழுது சுறுசுறுப்பாக மக்கள் வேலைக்குப் புறப்படுகிறார்கள். இதற்குள் கீழ்வானம் சிவக்க நான் தங்கவர்ணமான கதிர்களைப் பரப்பிக்கொண்டு வட்ட வடிவமாக உதயம் செய்கிறேன்.

2. என்னைக் கண்டு மலர்கள் மலர ஆரம்பிக்கின்றன. இப்படிப்பட்ட காலை வேளையில் குளிர்ந்த காற்று இன்பமாக வீசுகிறது. பொன் போலப் பிரகாசிக்கும் என் கண்ணால், பலகணிவாசல் வழியாக உங்களை நான் பார்க்கிறேன். பிள்ளைகளே, இந்தநேரம் உங்களுடைய மனத்திற்கு ஆனந்தமாக இருக்

கும். அப்பொழுது உங்களுடைய அறிவு தெளிவாக இருக்கும். நீங்கள் பாடம் படிப்பதற்கு இது சரியான காலம் என்று நான் உங்களுக்கு உபதேசம் செய்கிறேன்.

3. நீங்கள் ஓர் ஊரிலிருந்து வேறு ஊர்களுக்குப் போகும் பிரயாணிகளைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? என்னைப்போன்ற ஒரு



பிரயாணியை நீங்கள் ஒருபொழுதும் பார்த்திருக்க மாட்டீர்கள். இந்தப் பரந்த ஆகாயத்திலே நான் எப்பொழுதும் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறேன். எனக்கு இளைப்பு உண்டாவதேயில்லை; நான் ஒரு நாளும் சோம்பேறியாக இருப்பதும் இல்லை. என் ஒளி பரவாத இடம் இல்லை; நிலம், நீர், நாடு, காடு,

மரம், மாடு முதலிய எல்லாவற்றிற்கும் நான் ஒளி தருகிறேன்.

4. நான் காலையில் ஆறு மணிக்கு உதிக்கிறேன். ஆறு மணி முதல் பன்னிரண்டு மணி வரை உள்ள நேரத்தை **முற்பகல்** என்று சொல்லுகிறார்கள். பன்னிரண்டு மணியாக உள்ள நேரத்தை நண்பகல் என்று சொல்லுகிறார்கள். பன்னிரண்டு மணி முதல் நான் மறையும் வரையில் உள்ள நேரம் பிற்பகல் ஆகும். நான் மறைந்தபின் இரவு வருகிறது. இரவும் பகலும் சேர்ந்து ஒரு நாள் ஆகும். இவ்வாறு தினத்தை உண்டாக்குவதால் எனக்குத் '**தினகரன்**' என்றும், '**பகலவன்**' என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

5. ஆகாயத்தில் நான் ஏற, ஏற வெய்யில் அதிகம் ஆகிறது. உச்சிவேளையில் நான் உங்கள் தலைக்கு நேராகத் தோன்றுகிறேன். அப்பொழுது வெய்யில் கடுமையாக இருக்கிறது அல்லவா ? பின்பு நான் மேற்கே சாயச் சாய, வெய்யில் தணிகிறது. மாலை வேளையில் காயும் மஞ்சள் வெய்யில் உடம்புக்கு ஆரோக்கியம் தருகிறது. நான் அஸ்தமித்தபின் எங்கும் இருள் மூடிவிடும். ஆனால் அப்பொழுது வானத்தில் நட்சத்திரங்கள் பிரகாசிக்கும். இரவில் சந்திரனுக்கும் வெளிச்சம் கொடுத்து நானே உதவி செய்கிறேன்.

6. நான் இல்லா விட்டால் வெளிச்சமும் இல்லை, வெப்பமும் இல்லை; ஒரே இருட்டாக இருக்கும். நீங்களும் மிருகங்களும் பறவைகளும் புல் பூண்டுகளும் பிழைத்திருக்க முடியாது. நானே உலகத்திற்கு உயிராக இருக்கிறேன்.

கேள்விகள்

1. காலை நேரம் எவ்விதம் இருக்கும்?
2. முற்பகல், நண்பகல், பிற்பகல் என்றால் என்ன?
3. சூரியன் இல்லாவிட்டால் என்ன கெடுதல்கள் நேரிடும்?

பயிற்சி

1. சுறுசுறுப்பாக, தோன்றுகிறது, ஏற—எதிர்ப் பதங்கள் எழுது.
2. பரந்த, பறந்த—அர்த்த வித்தியாசம் விளங்கும்படி தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.
3. ஒலி, ஒழி, ஒளி—அர்த்தம் எழுது.

6. வேம்பு

அடர்ந்து	இளைப்பாறு	ஔஷத
இடையே	பயன்	தற்காலம்
அணிந்துகொள்	நோயாளி	பழைய
அருகில்	கஷாயம்	கரடு முரடான

1. நமது தேசத்திலுள்ள பெரிய மரங்களில் வேப்பமரமும் ஒன்றாகும். அதன் இலைகள் சிறியனவாயும், ஓரங்களில் வாள்போல் கூர்மையாயும் இருக்கின்றன. அடர்ந்து பச்சையாக

இருக்கும் இலைகளின் இடையே வெண்ணிற மான வேப்பம்பூக்கள் கொத்துக் கொத்தாகத் தொங்குகின்றன. இப்பூக்கள் நட்சத்திரக் கூட்டங்கள்போல் பார்வைக்கு அழகாக இருக் கின்றன. வேப்பங்காய்கள் குழந்தைகள் காது களில் அணிந்து கொள்ளும் 'டோலாக்குகள்' போல் அழகாகவும் பளபளப்பாகவும் இருக் கின்றன; பச்சை நிறமாக இருக்கும். இக் காய்கள் பழுத்தால் மஞ்சள் நிறம் ஆகும்.

2. வெய்யிலில் ஒருவன் வேப்ப மரத்தின் நிழலில் போய் நின்றால், அது அவனுக்கு மிகுந்த குளிர்ச்சியைக் கொடுக்கிறது. அதன் அடர்ந்த இலைகளும் பரந்த கிளைகளும் அதை ஓர் அழகான குடிசை போல் தோன்றும்படி செய்கின்றன. இம்மரம் உஷ்ண தேசங்களில் வளர்கின்றது. வீடுகளின் அருகில் வேப்ப மரங்களை வளர்த்தால், குளிர்ச்சியாக இருக் கும்; சுத்தமான காற்றும் கிடைக்கும்.

3. வேப்ப மரம் பலவகையிலும் உப யோகம் ஆகிறது; வழி நடந்து செல்வோர் இம் மரங்களின் நிழலில் தங்கி இளைப்பாறு கிறார்கள். இம் மரங்களின் இலை, பூ, காய், பட்டை முதலியவை எல்லாம் பயன்படு கின்றன. வேப்பிலை ஒட்டகத்திற்கு முக்கிய மான உணவு ஆகிறது. இந்த இலையை அரைத்து வைசூரியால் வருந்தும் நோயாளி

களின் உடம்பில் பூசுவது உண்டு. வைசூரி கண்ட வீடுகளிலும் குழந்தை பிறந்த வீடுகளிலும் வேப்பிலையை வாசலில் கட்டிவைப்பது வைதிகர்களின் வழக்கம். வேப்பிலையில் பட்ட காற்று உடம்பிலே படுவதாலே சில நோய்கள் தீர்ந்துவிடும் என்று சிலர் நம்புகிறார்கள்.

4. வேம்பின் பட்டை, ஈர்க்கு முதலியவற்றிலிருந்து இருக்கும் கஷாயம் நோய்களுக்கு நல்ல மருந்து ஆகும். நமது நாட்டிலுள்ள வைத்தியர்களில் சிலர் வேப்பங்கட்டையை மருந்து செய்ய விறகாகவும் உபயோகிக்கிறார்கள். வேப்பங்குச்சி பல் துலக்க உதவுகிறது. வேப்பம் பூவும் பலவிதமாக உபயோகம் ஆகிறது. வேப்பம் பழத்தின் மேல் காக்கைக்கு அதிக விருப்பம் உண்டு. வேப்ப மரத்தின் பசையும் வேப்பம் பிண்ணாக்குங்கூட மருந்தாக உபயோகப்படுகின்றன.

5. வேப்பங்கொட்டையை **வேப்ப முத்து** என்றும் சொல்கிறோம். இதிலிருந்து இறக்கும் எண்ணெய் வாதம் முதலிய சில நோய்களுக்குச் சிறந்த ஔஷதமாகும். தற்கால வைத்தியர்கள் **காட்லிவர்** எண்ணெயை உபயோகிப்பது போல், பழைய நாட்டுவைத்தியர்கள் வேப்பெண்ணெயையும் அதிகமாக

உபயோகித்து வந்தார்கள். வேப்பெண்ணெயை உபயோகித்து இக்காலத்தில் சோப்பும் செய்கிருர்கள். வேப்பங்கட்டைகளைச் சட்டங்களாக அறுத்து நிலை, சன்னல் முதலியன செய்வதற்கு உபயோகிக்கலாம்.

6. வேப்பமரம் விதையிலிருந்து உற்பத்தியாகிறது. மரத்தின் அடியில் தோண்டிப் பார்த்தால், இதன் வேர்கள் பூமிக்குள் ஆழமாகப் படர்ந்து போவது தெரியும். வேருக்கு மேல் தெரியும் அடிமரம் பருமனுகை இருக்கும். இதன் வெளிப்புறம் கரடு முரடான பட்டைகளால் மூடப்பட்டிருக்கும். நமது தேகத்தின்மேல் தோல் மூடியிருப்பதுபோல் பட்டை மரத்தை மூடியிருக்கிறது.

கேள்விகள்

1. வேப்பிலைகள் எவ்விதம் இருக்கின்றன ?
2. வேப்ப மரத்தால் ஏற்படும் உபயோகங்கள் யாவை ?
3. வேப்ப மரம் உண்டாவது எவ்விதம் ?

பயிற்சி

1. சிறியன, கூர்மை, தற்காலம், அதிகமாக, வெளிப்புறம்—எதிர்ப்பதங்கள் எழுது.

2. பச்சை நிறமாக இருக்கும் வேப்பங்காய்கள் பழுத்தால்——(பூர்த்தி செய்.)

இலக்கணம்

மரம், வீடு, முகம், சித்திரை—இவை பெயர்ச் சொற்கள். கண் முதலிய பொறிகளுக்கும் மனத்துக்கும் விஷய

மாகும் பொருளைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல் ஆகும்.

மரம், வாள், ஒட்டகம், காகம் என்னும் பெயர்ச் சொற்கள் பொருள்களைக் குறிக்கிறபடியால் பொருட் பெயர்கள் ஆகும்.

கிராமம், குடிசை, வீடு என்னும் பெயர்ச் சொற்கள் இடங்களைக் குறிக்கின்றன. இவை இடப் பெயர்கள்.

பள்ளிக்கூடம், சூரியன், கிளி, தெரு, சன்னல், புத்தகம், பை, தோட்டம்—இவற்றுள் பொருட்பெயர்கள் எவை? இடப்பெயர்கள் எவை?

7. வேதநாயகம் பிள்ளை

புதல்வர்	பட்சபாதம்	தெய்வபக்தி
மரபு	நல்லறிவு	நிந்திப்பது
சார்ந்தது	புகட்ட	பாராட்டினுர்கள்
அரிய	இளம்பருவம்	இயற்றிய
நூல்கள்	கவி	பிரசித்தமானது
வராகன்	ஞானம்	ஆங்கிலம்

1. வேதநாயகம் பிள்ளை என்பவர் கி. பி. 1826-ம் வருஷம் வேளாண்குளத்தூரில் சவரிமுத்துப் பிள்ளை என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். அவர் குடும்பம் வேளாளர் மரபில் தோன்றியதாயினும், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்ததாகும்.

2. வேதநாயகம் பத்து வயதளவும் தமது சொந்த ஊரிலேயே தமிழ் வாசித்துக் கொண்டிருந்தார். பதினேராவது வயது முதல் பக்கத்திலுள்ள திரிசிரபுரம் சென்று ஆங்கில மொழியைக் கற்கத் தொடங்கினர்.

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் அவர் பல அரிய தமிழ் நூல்களைக் கற்றுத் தேர்ச்சி அடைந்தார்.

3. அவர் ஆங்கிலத்திலும் தேர்ந்திருந்ததால் 1848-ம் வருஷத்தில் அவருக்கு ஐந்து



வராகன் சம்பளமுள்ள 'ரிக்கார்டு கீப்பர்' வேலை கிடைத்தது. சில வருஷங்களுக்குப் பின், அவர் முனிசீப் வேலைக்காக நடத்தப் பெற்ற பரீட்சையில் தேறினார்.

4. 1857-ம் வருஷத்தில், அவர் சீகாழியில் ஜில்லா முனிசீபாக நியமிக்கப் பெற்றார். பிறகு மாயூரம் முதலிய இடங்களிலும் ஜில்லா முனிசீபாக இருந்தார். 1872-ம் வருஷம் வரையில் அவர் இவ்வுத்தியோகத்தில் அமர்ந் திருந்தார். வழக்குகளை நன்கு விசாரித்துப் பட்சபாதம் இல்லாமல் தீர்த்து வைப்பதில் அவர் பெயர் பெற்று விளங்கினார்.

5. சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகிய பின்பு, வேதநாயகம் பிள்ளை மாயூரம் நகர சபைக்குத் தலைவராக இருந்து, அந்த நகரத் திற்குப் பல நன்மைகளைச் செய்துவந்தார். மக்களுக்கு நல்லறிவு புகட்ட விரும்பி அவர் தமிழில் சில நூல்கள் செய்திருக்கிறார். இளம் பருவம் தொடங்கி கவிபாடும் சக்தி உள்ளவ ராக விளங்கினார். சங்கீத ஞானமும் அவ ரிடம் விசேஷமாக அமைந்திருந்தது. அவர் தெய்வபக்தியிலும் சிறந்தவர். அவர் ஒரு மதத்தையும் நிந்திப்பதில்லை. அவரைக் கிறிஸ்தவர்களும் இதர மதத்தினர்களும் ஒருங்கே புகழ்ந்து பாராட்டினார்கள்.

6. தாய்மொழியாகிய தமிழ்மொழியில் அவருக்கு விசேஷமான பற்று ஏற்பட்டிருந் தது. தமிழர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற ஆசையும் அவரிடம் அதிக மாகக் காணப்பட்டது. தமிழ் அறிஞர்களு

டன் சம்பாஷணை செய்வது அவருக்கு ஆனந்தமாக இருந்தது. இப்பெரியவர் தமது அறுபத்து மூன்ருவது வயதில் காலம் சென்ருர்.

7. அவர் இயற்றிய நூல்களில் **பிரதாப முதலியார் சரித்திரம்** மிகவும் அழகானது. **சுகுண சுந்தரி சரித்திரமும்** ஓர் அழகிய கதையாகும். இக் கதைகளைத் தவிர பல இனிய பாடல்களையும் தமிழில் இயற்றி இருக்கிருர். இப்பாடல்களில் பிரசித்தமானது **சர்வ சமய சமரசக் கீர்த்தனை.** அவர் இயற்றிய **நீதி நூலும்** ஓர் இனிய நூலாகும்.

8. பெண்களுக்கு நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு அவர் இயற்றி வெளியிட்ட நூல் **பெண் மதி மாலை.** இவ்வசன நூலில் பெண்கள் கல்வி, பெண்கள் நடத்தப்பட வேண்டிய விதம், ஜீவகாருண்யம், உள்ளன்போடு உபசரித்தல், கடவுளுடைய மகிமை, சாஸ்திரமும் அனுஷ்டானமும், புலாலுண்ணுதலை விலக்குதல், காலத்திஞேட்டம், பாத்திரமறிந்து பிச்சையிடல், செல்வப் பொருளிலும் கல்விப் பொருள் சிறந்தது முதலிய விஷயங்களைப்பற்றித் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. வேதநாயகம் பிள்ளை இயற்றிய நூல்கள் படிக்கப் படிக்க இன்பம் தருகின்றன. தமிழர்களாகிய நாம் இந்த நூல்களைப் படித்துப் பயன் பெற வேண்டும்.

கேள்விகள்

1. வேதநாயகம் பிள்ளை எந்த மதத்தைச் சேர்ந்தவர்?
2. அவர் பார்த்த உத்தியோகங்கள் யாவை?
3. அவருடைய குணவிசேஷங்கள் எவை?
4. அவர் இயற்றிய நூல்கள் எவை?

பயிற்சி

வேதநாயகம் பிள்ளை சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகிய பின்பு, மாயூரம் நகர சபைக்குத் தலைவராக இருந்து, அந்த நகரத்திற்குப் பல நன்மைகளைச் செய்து வந்தார்.—இந்த வாக்கியத்தை மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

இலக்கணம்

வருஷம், மாதம், நாள், மணி—இப்பெயர்ச்சொற்கள் காலத்தைக் குறிக்கிறபடியால் **காலப் பெயர்கள்** ஆகும்.

இலை, பூ, காய், பட்டை, தலை, காது—இப்பெயர்ச் சொற்கள் உறுப்புகளைக் குறிக்கின்றன. 'உறுப்பு' என்பதற்குப் பதிலாகச் 'சினை' என்றும் சொல்லலாம். இவ்விதம் உறுப்புகளைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் **சினைப் பெயர்கள்** ஆகும்.

காலப் பெயர், சினைப்பெயர் இவை ஒவ்வொன்றுக்கும் ஐந்து உதாரணங்கள் எழுது.

பின்வரும் பெயர்கள் என்ன பெயர் என்று எழுதுக :—

அரசன், மலை, மாளிகை, வால், வாரம்.

8. தாய் தந்தையரை வணங்குதல்

உற்றவர்	உள்ளுடைந்தீர்	என்பொருட்டாக
மொழிவேன்	பக்ஷணம்	பணிந்து
எக்களிப்பு	சேர்மன்	பிழை
துயர்	ஆதரித்தீர்	ஆசீர்வதி

உற்றவரே ! என்னைப் பெற்றவரே, தினம்
உமக்கே நமஸ்காரம்.
முற்றுமே நீர் செய்த உதவிக்கு நான் என்ன
மொழிவேன் உபசாரம் ! 1

எனக்கொரு சுகம்வரில் உமக்கு வந்ததுபோல
எக்களிப் படைந்தீரே ;
எனக்கொரு துயர்வரில் உமக்கு வந்ததுபோல
ஏங்கிஉள் ளுடைந்தீரே ; 2

பாலுஞ்சோ றும்பக்ஷணங்களும் எனக்கிட்டுப்
பழஞ்சோ றுண்டீரே ;
காலமெல் லாம்நல்ல சோமன்நா னுடுக்கநீர்
கந்தையைக் கொண்டீரே. 3

மண்பிள்ளை யாயினும் தன்பிள்ளை யென்றெனை
மகிழ்ந்தா தரித்தீரே ;
பண்புடன் என்பொருட் டாகநீர் பலரையும்
பணிந்துப சரித்தீரே. 4

தெரியாமல் நான்செய்த பிழைபொறுத் தென்னிடம்
திருவருள் பதிப்பீரே ;
அரும்வேத நாயகன் அருள் செய்யும்படி என்னை
ஆசீர் வதிப்பீரே. 5

—வேதநாயகம் பிள்ளை

கேள்விகள்

1. 'தாய் தந்தையரை வணங்குதல்' என்ற பாடலைப் பாடியவர் யார்?

2. தாய் தந்தையர்—ஒரு வார்த்தை என்ன?

3. தாய் தந்தையர் எப்பொழுது எக்களிப்படைகின்றனர்? எப்பொழுது ஏங்கி உள்ளுடைகின்றனர்?

4. தாய் தந்தையர் தம் குழந்தையிடம் மிகுந்த அன்பு காட்டுகின்றனர் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் எழுது.

5. இப்பாட்டில் பெற்றோரிடத்தில் என்ன வேண்டிக் கொள்ளப்படுகிறது?

பயிற்சி

1. எனக்கொரு, எனக்கிட்டு, காலமெல்லாம், நானுடுக்க, மகிழ்ந்தாதரித்தீர், பணிந்துபசரித்தீர்—பிரித்து எழுது.

2. சுகம்—எதிர்ப்பதம் என்ன?

இலக்கணம்

'என்னை ஆதரித்தீர்'. இந்த வாக்கியத்தில் பயனிலை எது? 'ஆதரித்தீர்'—பயனிலை. 'நீர்'—எழுவாய். 'நீர்' என்னும் வார்த்தை வாக்கியத்தில் இல்லாவிட்டாலும் அது மறைந்திருந்து அர்த்தம் கொடுப்பதால் தோன்றா எழுவாய் எனப்படும்.

கீழ்க்கண்ட வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்து எழுது :—

1. காலையில் சேவல் கூவுகிறது.
2. இங்கே வா.
3. விடியற்காலத்தில் மலர்கள் மலர்கின்றன.
4. நாம் ரோஜாப் பூக்களிலிருந்து பனிநீர் வடிக்கிறோம்.
5. குளிர்ந்த காற்று இன்பமாக வீசுகிறது.

9. காட்டு மிருகங்கள்

சுபாவம்	கூரிய	சுலபமாக
மாமிச பட்சிணி	இரை	தன்மை
தழை	குறி	வாய்ந்தன
சாக பட்சிணி	புதர்	பதிலாக
வெறி	பதிவிருந்து	பிடரி மயிர்

1. காடுகளில் வாழும் மிருகங்களைக் காட்டு மிருகங்கள் என்று சொல்லுகிறோம். இவற்றுள் சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களும் உண்டு; மானைப்போல் பயந்த சுபாவமுள்ள மிருகங்களும் உண்டு. சிங்கம், புலி முதலிய மிருகங்கள் வேறு மிருகங்களைக் கொன்று தின்று வாழும். இப்படிப்பட்ட மிருகங்களை **மாமிச பட்சிணிகள்** என்று சொல்கிறோம். மாமிசத்தைச் சாப்பிடாமல் புல், பூண்டு, இலை, தழை முதலியவற்றைத் தின்று வாழும் மிருகங்களைச் **சாக பட்சிணி கள்** என்று சொல்லுகிறோம். மான், யானை, குதிரை, ஒட்டகம் முதலிய மிருகங்கள் சாக பட்சிணிகள்.

2. காட்டு மிருகங்களில் அதிகமான கொடுமையும் ரத்த வெறியும் உள்ளது புலி. இது பூனையின் இனத்தைச் சேர்ந்தது. பூனை யின் பாதத்தைப்போல், இதன் பாதமும் மெத் தென்றிருக்கிறது. இது தன் பெரிய கூரிய நகங்களை வேண்டும்பொழுது வெளியே நீட்

டும்; வேண்டாத பொழுது உள்ளே சுருக்கி வைத்துக் கொள்ளும். பூனையைப்போல் புலியும் தன் இரைமேல் குறி தவருமல் பாய்ந்து பிடிக்கிறது. புலியின் உடலின் மேல் வளைந்த கருங்கோடுகள் காணப்படுகின்றன. இக் கோடுகள் புலிக்கு மிகவும் அவசியமானவை. புலி பகலில் புதர் நடுவில் படுத்திருக்கும்பொழுது, அதன் கருங்கோடுகள் இலைகளின் நிழலைப் போலத் தோன்றுகின்றன. இதனால் புலி பதிவிருந்து சமீபத்தில் வரும் மிருகங்களைச் சுலபமாகப் பிடித்துக் கொள்கிறது.



3. நரி, குள்ள நரி, ஓநாய் முதலிய பிராணிகள் நாயினத்தைச் சேர்ந்தவை. இப் பிராணிகளுக்குச் சுருக்கவும் நீட்டவும் கூடிய நகங்கள் இல்லை. பூனை இனத்தைச் சேர்ந்த மிருகங்களைப்போல், இவைகளும் மாமிச பட்சிணிகள். இரையைக் கிழிக்கும் நாய்ப் பற்கள் இப் பிராணிகளுக்கு உண்டு.

4. மான், ஒட்டகம் முதலியன பசுவின் இனத்தைச் சேர்ந்தவை. இவை சாக பட்சிணிகள்; இவை அசைபோடும் தன்மை வாய்ந்தன. கோவேறு கழுதை குதிரை இனத்

தைச் சேர்ந்தது. யானை, காண்டா மிருகம் முதலியன பன்றி இனத்தைச் சேர்ந்தவை. இவைகளும் சாகபட்சிணிகளே. இவைகளுக்குக் கனத்த தோல் உண்டு.

5. புலி, ஓநாய் முதலிய மிருகங்களைப் போல், கரடியும் ஒரு கொடிய மிருகமாகும். அதன் உடம்பு தடித்துக் கொழுத்திருக்கிறது; தலை பருத்து நீண்டிருக்கிறது. கரடியின் உடம்பு முழுவதும் நீண்டமயிர் அடர்ந்திருக்கிறது.

6. முள்ளம்பன்றியும் காட்டு மிருகங்களில் ஒன்று. இதற்கு மேல்வாயிலும் கீழ்வாயிலும் நீண்ட நாய்ப் பற்கள் இருக்கின்றன. இதன் உடம்பு முழுவதும் மயிருக்குப் பதிலாக முட்கள் காணப்படுகின்றன.

7. சிங்கத்தை **மிருக ராஜா** என்று சொல்கிறோம். அது மஞ்சளும் பழுப்பும் கலந்த நிறம் உடையது. அதன் பற்கள் நீளமாயும் மாமிசத்தைக் கிழிக்கும்படி கூர்மையாயும் அமைந்திருக்கின்றன. சிங்கமும் புலியைப் போல் பூனை இனத்தைச் சேர்ந்தது. ஆனால் புலிக்கும் இதற்கும் அதிக வித்தியாசம் உண்டு.



ஆண் சிங்கத்திற்குப் பிடரிமயிரும் வாலில் குஞ்சமும் உண்டு. பெண் சிங்கத்திற்குப் பிடரிமயிர் இல்லை. சிங்கம் துஷ்ட மிருகமா யிருந்தாலும், பசி உண்டான பொழுதுதான் பிராணிகளைக் கொல்லுகிறது.

கேள்விகள்

1. எவ்விஷயங்களில் புலியைப் பூனையுடன் ஒப்பிடலாம்?
2. புலியின் உடலின்மேல் வளைந்த கருங்கோடுகள் இருப்பதால் அதற்கு என்ன அநுகூலம்?
3. முள்ளம் பன்றியைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

பயிற்சி

இரை, இறை; கிளி, கிழி; புலி, புளி—அர்த்த வித்தியாசம் விளங்கும்படி தனித்தனி வாக்கியங்களில் அமைக்கவும்.

இலக்கணம்

இலையின் நிறம் பச்சை. வேப்பங்காயின் ருசி கசப்பு. பச்சை, கசப்பு என்னும் பெயர்ச் சொற்கள் தன்மை (குணம்) அல்லது பண்பைக் குறிக்கின்றன.

பொருளின் குணம் அல்லது தன்மையைக் குறிக்கும் சொல் பண்புப் பெயர் ஆகும்.

மாலை வேளையில் காயும் மஞ்சள் வெய்யில் உடம்புக்கு ஆரோக்கியம் தருகிறது. இந்த வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களின் வகையைக் கூறு.

10. ‘துஷ்டரைக் கண்டால் தூரவிலகு’

முதுமரம்	க்ஷணம்	வஞ்சனை
குடியிருந்து	பலாத்காரமாக	இயல்பான
காலங்கழித்து	சட்டைசெய்யாமல்	பகையாளி
மீண்டு	உரிமை	இயலாது
மாண்டது	வழக்காடுவது	நடுவுநிலைமை
கதி	உடன்பட்டது	ஒருமிக்க
சசம்	வாதாடிக்கொண்டு	வழக்கற

1. காட்டிலிருந்த ஒரு முதுமரத்தில் ஒரு காகம் வசித்து வந்தது. அம்மரத்திலிருந்த பொந்தில் **கபிஞ்சலன்** என்ற குருவி குடியிருந்து வந்தது. மாலை வேளைகளில் காகமும் குருவியும் பல பல பேச்சுகள் பேசிச் சந்தோஷமாகக் காலங்கழித்து வந்தன.

2. ஒரு நாள் வேறொரு பறவையுடன் இரைதேடச் சென்ற கபிஞ்சலன் மீண்டு வராமையைக் கண்ணுற்ற காகம், ‘கபிஞ்சலன் வேறோர் இடத்தில் தங்குவது கிடையாதே, அது வேடர் வலையில் பிடிபட்டதோ அல்லது எவர் கையாலேனும் அடிபட்டு மாண்டதோ? அதன் கதி என்னாயிற்றோ?’ என்று நினைத்து வருத்தமுற்று அதன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

3. இப்படியிருக்க, கபிஞ்சலன் சென்ற மூன்றாம் நாள் ஒரு முயல் கபிஞ்சலன்

வசித்து வந்த பொந்தில் குடிபுகுந்தது. காகம் முயலைப் பலவிதமாகத் தடுத்தும் பயன்பட வில்லை.

4. கபிஞ்சலன் சில நாட்கள் எங் கெங்கோ சென்று நெல்மணிகளைத் தின்று கொண்டிருந்தது. பிறகு தன் இருப்பிடத் திற்குத் திரும்பியது. அது வசித்து வந்த பொந்தில் குடியேறி யிருந்த முயலைப் பார்த்து, "அடா, சசமே, இது யாருடைய வீடு என்று நினைத்தாய்! என்னுடைய வீடு என்பதை நீ அறியாயோ? இந்த க்ஷணமே இவ்விடத்தை விட்டு வெளியேறு. ஒருவர் வீட்டில் வேருெருவர் பலாத்காரமாகக் குடி புகுவது சிறிதும் நியாயம் இல்லை" என்றது.

5. முயல் கபிஞ்சலனுடைய வார்த்தை களைச் சிறிதும் சட்டை செய்யாமல் அதை நோக்கி, "அடமூடா, இது உன் வீடு அன்று; இது என் வீடே. போனவன் காணி வந்தவ னுக்கு என்பதை நீ அறியாயோ? இந்த இடத்தை விட்டு நீ நீங்கின பொழுதே இதன் உரிமையை இழந்தாய். இப்பொழுது இந்த வீட்டை நான் அனுபவித்து வருவதால் இது என் வீடே. நீ எங்கேனும் ஓடிப்போ" என்றது.

6. கபிஞ்சலன், "சசமே, நீ இவ்விதம் வீணில் வழக்காடுவது முறையாகாது. நாம்

நமது வழக்கைத் தர்ம சாஸ்திரம் அறிந்தோரிடம் சொல்லுவோம். அவர் கூறும் முடிவின்படி நடந்து கொள்வோம்'' என முயலும் அதற்கு உடன்பட்டது.

7. குருவியும் முயலும் வாதாடிக்கொண்டு தர்ம சாஸ்திரம் அறிந்தோரைத் தேடிச் சென்று கொண்டிருந்தன. **கூர்ம் பல்லன்** என்னும் பூனை இவற்றின் பேச்சைக் கேட்டு, 'ஆ, இவை வழக்கைத் தீர்த்துக் கொள்ளப் போகின்றன. வஞ்சனையால் இவற்றை ஏமாற்றிப் பிடித்துத் தின்ன வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டது.

8. கூர்ம்பல்லன் வழியிலிருந்த நதிக் கரைக்கு ஓடிச் சென்று, அங்கே கண்களை மூடிக்கொண்டு சூரியனை நோக்கித் தவம் செய்வதுபோல் பாவனை செய்து கொண்டிருந்தது. முயல் பூனையைக் கண்டதும் "கபிஞ்சலா, இப்பூனையை நோக்குமிடத்து இது தர்ம சாஸ்திரம் அறிந்தது போலத் தோன்றுகிறது. நாம் நமது வழக்கை இதனிடம் உரைப்போம்'' என்றது. கபிஞ்சலனும் அதற்குச் சம்மதித்தது; தூரத்தில் நின்று பூனையிடம் வழக்கைக் கூறினது.

9. பூனை அவைகளை நோக்கி, "நான் கிழவனானபடியால் தூரத்திலிருந்து நீங்கள் பேசும் பேச்சுக்களைக் கேட்க இயலாது. நீங்

கள் சமீபத்தில் வந்து என்காதில் படும்படி உங்கள் வழக்கைக் கூறினல் நான் நடு நிலைமை தவருது தீர்ப்பு அளிப்பேன்'' என்றது. குருவியும் முயலும் பூனையினிடத்தில் நம்பிக்கை வைத்து அதன் அருகில் சென்றன. பூனை அவற்றை ஒருமிக்கச் சேர்த்துப் பிடித்து வழக்கற இரண்டையும் தின்றது.

கேள்விகள்

1. கபிஞ்சலன் வசித்து வந்த பொந்தில் குடியேறியது யார்?
2. கபிஞ்சலன் திரும்பி வந்தபொழுது முயல் கூறியது என்ன?
3. கபிஞ்சலனும் முயலும் தம் வழக்கைத் தீர்த்துக் கொள்ள என்ன முடிவு செய்தன?
4. இக்கதையிலிருந்து நீ அறியும் நீதிகள் என்ன?

பயிற்சி

.இரைதேட, மீண்டும், எதிர்பார்த்து, பலாத்காரமாக—வாக்கியங்களில் உபயோகித்து எழுது.

11. திருவள்ளுவர்

புலவர்	உடன் பிறந்தவர்	வறுமை
இழிவு	புகழ்ந்து	மேற்கொண்டார்
ஊதியம்	செவ்வனே	கருகி
வாக்குறுதி	உலை	சமைந்து
பணிவிடை	மாருக	வணிகன்
வர்த்தகம்	நீதி நூல்	வேண்டுகோள்

1. நம் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த புலவர்களில் திருவள்ளுவர் ஒருவர். இவர் சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் மயிலாப்பூரில் பிறந்தவர். இவர் தாயார் பெயர் ஆதி; தந்தையார் பெயர் பகவன்; உடன் பிறந்தவர்கள் கபிலர், ஔவையார் முதலியவர்கள். பெற்றோர்கள் தம் வறுமை காரணமாகப் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பிறந்த போதே அவ்வவ்விடத்தில் விட்டுச் சென்றனர். இவ்விதம் மயிலாப்பூரில் விடப்பட்ட திருவள்ளுவரை வள்ளுவர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் கண்டெடுத்து வளர்த்தார். ஆதலால் திருவள்ளுவருக்கு இப்பெயர் ஏற்படலாயிற்று என்று கூறுவர். அவருடைய வாழ்க்கை வரலாறு பலராலும் பலவாறு கூறப்படுகின்றது. அவற்றுள் ஒன்று பின்வருவது.

2. திருவள்ளுவர் இளமையிலேயே தமிழ் நூல்களைக் கற்றுப் பெரும் புலவரானார். அக்காலத்தில் புலவர்கள் செல்வர்களையும்

அரசர்களேயும் புகழ்ந்து பாடி அவர்கள் தரும் பரிசுகளேப் பெற்று வாழ்ந்து வந்தனர். இவ் விதம் வாழ்வது இழிவு என்று திருவள்ளுவர் கருதினர். நெசவுத் தொழிலே மேற்கொண்டார். அதன்மூலம் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு காலங் கழித்து வந்தார்.

3. அக்காலத்தில் காவிரிப்பூம் பட்டி னத்தில் மார்க்கசகாயர் என்னும் ஒரு வேளாளர் இருந்தார். அவர் பெரிய செல்வர். ஆயிரம் ஏர் உடையவர். அவர் உழவுத் தொழிலேச் செவ்வனே நடத்தி வந்தார். இவ்விதமிருக்கையில் சில வருஷங்களாகப் பயிர்கள் கதிர் விடும் சமயத்தில் கருகிப் போயின. இவ்விதம் பலமுறை ஏற்படவே அவர் கவலே கொண்டார். அக் குறையை நீக்குபவருக்குத் தம் மகள் வாசுகியை மணம் செய்து தருவதாக யாவரும் அறியக் கூறினர்.

4. அச்சமயம் மார்க்கசகாயர் திருவள் ளுவரைப் பற்றிக் கேள்விப்பட்டார். மயிலாப் பூருக்குச் சென்று, திருவள்ளுவரைக் கண்டு தம் குறையை நீக்கும்படி வேண்டினர். திரு வள்ளுவரும் அவரிடம் இரக்கங் கொண்டு அவருடன் காவிரிப்பூம் பட்டினத்திற்குச் சென்ருர். 'நிலங்கள் தவருது பலன் தருக' என்று கூறினர். பின்னர் பயிர்கள் கருகாமல் வளர்ந்து பலன் தரலாயின. உடனே மார்க்க

சகாயர் தாம் செய்திருந்த வாக்குறுதியைத் திருவள்ளுவரிடம் கூறினர். வாசுகியை மணம் செய்து கொள்ளும்படி வேண்டினர்.

5. திருவள்ளுவர் கொஞ்சம் மணலை மார்க்கசகாயரிடம் கொடுத்து, "இம் மணலை உமது மகள் சமைத்துத் தந்தால் நாம் அவளை மணப்போம்" என்றார். மார்க்கசகாயர் பதில் ஒன்றும் பேசவில்லை. அம்மணலை வாங்கிக் கொண்டு போய், தமது மகளிடம் கொடுத்துத் திருவள்ளுவர் கூறியதைத் தெரிவித்தார்.

6. வாசுகி அந்த மணலைப் பெற்றுக் கொண்டாள். கடவுளை வணங்கினாள். அந்த மணலை உலையிலிட்டாள். என்னே அதிசயம்! அந்த மணலும் சமைந்து பதமாயிற்று. அது கண்டு எல்லோரும் அதிசயித்தனர். திருவள்ளுவரும் வாசுகியை மணந்து கொண்டார். சில காலம் காவிரிப்பூம் பட்டினத்திலேயே தங்கியிருந்தார். பின்னர் தம் மனைவியுடன் மயிலாப்பூரை அடைந்தார்.

7. வாசுகியம்மை தமது கணவரையே தெய்வமாகக் கொண்டு பணிவிடைகள் செய்து வந்தார். கணவர் சொல்லுக்கு மாறாக எதுவும் சொல்லார், செய்யார். ஒரு சமயம் திருவள்ளுவர் நீர் ஊற்றின சோறு உண்கையில் தமது மனைவியை அழைத்து, "பெண்ணே, சோறு சுடுகிறது; விசிறி கொண்டுவா"

என்று கூறினர். வாசுகி அம்மையாரும் பதி லொன்றும் சொல்லாமல் ஒரு விசிறி கொண்டு வந்து கொடுத்தார்.

8. அக்காலத்தில் மயிலாப்பூரில் ஏலேல சிங்கன் என்னும் வணிகன் ஒருவன் இருந் தான். அவன் கப்பல் வர்த்தகம் மூலம் மிகுந்த பொருள் சம்பாதித்திருந்தான். திருவள்ளுவர் அந்த வணிகனிடத்தில் துணி நெய்வதற்கு வேண்டிய நூல் வாங்குவது வழக்கம். அவ் வணிகன் திருவள்ளுவருடைய கல்விச் சிறப் பைக் கண்டு அவரைத் தனக்கு ஆசிரியராகக் கொண்டான். அவர் அப்போது கூறும் புத்தி மதிகளைக் கேட்டு அவற்றின்படி நடந்து வந்தான்.

9. ஏலேல சிங்கனும் வேறு பலரும் ஒரு நீதி நூலை இயற்றியருளும்படி திருவள்ளுவரை வேண்டினர்கள். அவர்களது வேண்டுகோளின் படி திருவள்ளுவர் **திருக்குறள்** என்னும் நூலை இயற்றினர். இது தமிழ் நூல்களில் சிறந்து விளங்குகிறது. இதில் பல நீதிகள் கூறப்பட்டுள்ளன. இந்த நூலை நீங்கள் கற்றுப் பயன் அடைவீர்களாக!

கேள்விகள்

1. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் எப்பொழுது?
2. மார்க்கசகாயர் யார்? அவருக்கு ஏற்பட்ட கவலை என்ன? அது எவ்விதம் தீர்ந்தது?

3. திருவள்ளுவர் இயற்றிய நூலின் பெயர் என்ன?

4. திருவள்ளுவர் எத்தொழில் செய்து காலங் கழித்து வந்தார்?

பயிற்சி

1. இளமை, புகழ்ந்து—எதிர்ப்பதம் எழுது.

2. மார்க்கசகாயர் மயிலாப்பூருக்குச் சென்று, திருவள்ளுவரைக் கண்டு, தம் குறையை நீக்கும்படி வேண்டினர்.—இந்த வாக்கியத்தை மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

இலக்கணம்

ராமன் நடக்கிருன்.—'நடக்கிருன்' என்பது வினைச் சொல். இது செயலைக் காட்டுகிறது.

நடத்தல் நல்லது.—'நடத்தல்' என்பது தொழிற் பெயர். இது தொழிலின் பெயரைக் காட்டுகிறது.

கீழ்க்கண்ட சொற்களைத் தொழிற் பெயர்களாக மாற்றி எழுது :—

எழுது, போ, வா, நில், உச்சரி, நட, சிரி, கொடு.

12. பூமி

பகுதி	ஒரேமாதிரி	முல்லை
புரண்டு	சார்ந்த	மருதம்
மோதும்	கும்பல்	மொண்டு
யாத்திரை	அடுத்து	நெய்தல்
துறைமுகம்	குறிஞ்சி	நானிலம்

1. நாம் வசிக்கும் பூமி பந்துபோல் உருண்டையாக இருக்கிறது. இதில் சில பாகம் நிலமும் சில பாகம் நீருமாயுமிருக்கின்றன. நீர்ப்பகுதியை நாம் **கடல்** என்றும் **சமுத்திரம்**

என்றும் சொல்கிறோம். சமுத்திரத்தின் அலைகள் புரண்டுவந்து மோதும் கரையோரத்தைக் **கரை** என்று சொல்கிறோம். நாம் கப்பலில் ஏறிச் சமுத்திர வழியாகப் பூமியைச் சுற்றி யாத்திரை செய்யலாம். கடலோரங்களில் பல **துறைமுகங்கள்** காணப்படுகின்றன. பூமியின் நிலப்பகுதி எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக அமைந்திருக்கவில்லை; அங்கங்கே உயர்ந்த மலைகளும் தாழ்ந்த பள்ளத்தாக்குகளும் காணப்படுகின்றன. மேடு பள்ளங்கள் இல்லாமல் எங்கும் சமமாக இருக்கும் நிலப் பகுதியைச் **சமதரை** என்று சொல்கிறோம்.

2. மலைகளில் தேக்கு, கருங்காலி முதலிய பலவகையான பெரிய மரங்கள் செழித்து வளர்கின்றன. புலி, கரடி, யானை முதலிய மிருகங்கள் மலைகளிலும் மலைகளைச் சார்ந்த காடுகளிலும் காணப்படுகின்றன. மலைகளில் பெய்யும் மழை நீர் அருவிகளாகப் பெருகி விழுகிறது. அருவிகள் ஒன்ருகச் சேர்ந்து நதிகளாகி நாட்டைச் செழிக்கச் செய்கின்றன. சிறிய மலையைக் **குன்று** என்றும், கும்பலாக இருக்கும் மலைகளை **மலைத் தொகுதி** என்றும் சொல்கிறோம். சில இடங்களில் மலைகள் ஒன்றை அடுத்து ஒன்ருகத் தொடர்ந்து செல்லுகின்றன. இவை **மலைத் தொடர்** என்று சொல்லப்படும். சில மலைகள் நெருப்

யையும் புகையையும் கக்குகின்றன. இவைகளை **எரி மலைகள்** என்று சொல்கிறோம். மலையும் மலை சார்ந்த இடமும் **குறிஞ்சி** என்று சொல்லப் படும்.

3. நமது பூமியில் பலவகையான காடுகள் உண்டு. காடுகளையும் காடுகளை அடுத்த இடங்களையும் **முல்லை நிலம்** என்று கூறுகிறார்கள். காடுகளில் பலவகையான மரங்களும் செடி கொடிகளும் புல் பூண்டுகளும் செழித்து வளர்ந்திருக்கும்.

4. பூமியிலுள்ள சமநிலமான பாகங்களில் பயிர்த் தொழில் விசேஷமாக நடைபெறுகின்றது. இப்படிப்பட்ட இடங்களில் நாடுகளும் நகரங்களும் தோன்றி இருக்கின்றன. இந்த இடங்களை **மருத நிலம்** என்று சொல்வது உண்டு. இங்கே ஆறு, குளம், ஏரி, கிணறு முதலிய நீர்நிலைகள் நிறைந்திருக்கும். ஆறுகள், ஏரிகள் இல்லாத சில இடங்களிலே, தண்ணீர் பூமிக்குள் ஆழமாகிய ஊற்றுக்கண்களில் காணப்படுகிறது. அவ்விடங்களில் வசிக்கும் மக்கள் ஆழமான கிணறுகள் தோண்டித் தண்ணீர் மொண்டு கொள்கிறார்கள்.

5. கடலும் கடல் சார்ந்த இடமும் **நெய்தல் நிலம்** என்று சொல்லப்படும். நெய்தல் நிலத்தில் செம்படவர் பலர் வசிப்பர்.

6. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நிலம் நான்கு வகையாகக் காணப்படுவதால், நாம் வசிக்கும் பூமிக்கு நமது தாய் மொழியில் **நானிலம்** என்றும் ஒரு பெயர் வழங்கி வருகிறது. மலைகளும் காடுகளும் சம நிலங்களும் கடற்கரையும் ஆகிய இடங்களில் பலவகையான மரங்களும் மலர்களும் செடி, கொடி, மிருகம், பறவை முதலியனவும் செழிப்பாகக் காணப்படுகின்றன. இதனால் தான் பூமி அழகுள்ளதாகவும் சிறப்புள்ளதாகவும் தோன்றுகிறது.

கேள்விகள்

1. பூமியின் வடிவம் என்ன?
2. சம தரை என்றால் என்ன?
3. நானிலம் என்பவை யாவை?
4. மருத நிலத்தைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
5. செம்படவர்கள் எந்த நிலத்தில் வசிக்கிறார்கள்?
6. பூமி அழகும் சிறப்பும் பெற்றுத் தோன்றுவது ஏன்?

பயிற்சி

கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

1. எரிமலைகள் ———— கக்குகின்றன.
2. சிறிய மலையைக் ———— என்கிறோம்.
3. நாம் ———— ஏறிச் சமுத்திர வழியாக ———— செய்யலாம்.

இலக்கணம்

உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் ஒவ்வொன்றுக்கும் ஐந்து உதாரணங்கள் சொல்.

ஜோஸப் ஓடுகிறுன். மாடு ஓடுகிறது.

இந்த வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்கள் எவை ? ஜோஸப், மாடு என்னும் பெயர்ச் சொற்கள் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவை.

மனிதர், தேவர் இவர்களைக் குறிக்கும் சொற்கள் உயர்திணை எனப்படும். திணை என்ருல் ஜாதி. உயர்திணை என்ருல் உயர்ந்த ஜாதி என்று அர்த்தம்.

மனிதர் அல்லாத மற்ற உயிருள்ள பொருள்களையும் உயிரில்லாத பொருள்களையும் குறிக்கும் சொற்கள் அஃறிணை எனப்படும். அஃறிணை என்ருல் உயர்வு அல்லாத ஜாதி என்று அர்த்தம்.

13. காப்பிக்கொட்டை

அருமை	ஊக்கம்	முனை
உற்சாகம்	பருகு	பக்குவமாக
ஆயாசம்	கருதுகின்றனர்	நசுக்கி
தீர்த்து	பானம்	சுத்தி செய்து

1. இக்காலத்தில் காப்பி குடியாதவர்களைக் காண்பது அருமை. காப்பி குடித்தால் உற்சாகம் உண்டாகுமென்று பலரும் நினைக்கிருர்கள். நாம் களைப்புற்றிருக்கும் சமயத்தில் ஒரு கோப்பை காப்பி வாங்கிச் சாப்பிட்டால், அது நமது ஆயாசத்தைத் தீர்த்து நமக்கு ஊக்கம் தருகிறது. வழக்கமாக இப்பானம் பருகுவோர், இது நல்ல மணமும் சுவையும் உடையதென்று கருதுகின்றனர். அதிக

மான காப்பித்தூள் போட்டுக் கஷாயம் செய்து குடித்தால், அது நமக்கு நீண்ட நேரம் வரைக்கும் நித்திரை வராமல் செய்து விடுகிறது.

2. காப்பிக் கஷாயம் காப்பிக்கொட்டையை வறுத்துப் பொடி செய்து, அப் பொடியைக் கொதிக்க வைத்த தண்ணீரில் போட்டு இறக்கப்படுகிறது. இக் கஷாயத்தில் பாலும் சர்க்கரையும் சேர்த்துப் பானம் செய்கிறார்கள். இக்கொட்டை எங்கும் கடைகளில் கிடைக்கும். இது காப்பிச் செடியிலிருந்து கிடைக்கிறது. காப்பிக்கொட்டை ஒரு பக்கம் உருண்டும் மறு பக்கம் தட்டையாகவும் இருக்கும். தட்டையான பக்கம் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரையில் குழிந்து பள்ளமாக இருக்கும்.

3. காப்பிச்செடி நமது மாகாணத்தில் நீலகிரி, சேர்வராயமலை முதலான இடங்களிலும், மேற்கு மலைத்தொடர்களின் சரிவுகளிலும் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. காப்பிச் செடி பயிர் செய்யும் இடத்தைக் **காப்பித் தோட்டம்** என்று சொல்கிறோம். பக்குவமாகப் பயிர்செய்த காப்பித் தோட்டம் தக்க லாபம் தருகிறது.

4. காப்பிச் செடியை அப்படியே வளர விட்டால், அது சாதாரணமாக 10 அல்லது 12 அடி உயரம் வளரக்கூடும். தோட்டக்காரர்கள் இச்செடியை 5 அடிக்கு மேல் வளர விடுவதில்லை. காப்பிப் பூ வெண்ணிறம்

ஆனது. மலர்ந்தபின் மூன்று தினங்களில் பூ உதிர்ந்து விடுகிறது. பூவுக்கு ஒரு பிஞ்சு தோன்றுகிறது. பிஞ்சு முற்றிக் காய்கள்



ஆகும். காய் நன்ருகப் பழுத்துப் பக்குவமான வுடன் அவற்றைப் பறிக்கிருர்கள். பழத்திற்கு இரண்டு விதைகள் உண்டு. இவ்விதைகளைக் **காப்பிக் கொட்டை** என்று சொல்கிருேம்.

5. பறித்த பழங்களை வெய்யிலிலாவது காற்றிலாவது உலரவைக்கிருர்கள். பிறகு அவைகளை ஓர் எந்திரத்தில் கொடுத்து நசுக்கித் தோலைப் போக்கிக் கொட்டையை வேருகப்

பிரித்து எடுக்கிறுர்கள். அப்பொழுது கொட்டைகள் சிறிதும் கெடாமல் பச்சையாக இருக்கும். அக் கொட்டைகளை வெய்யிலில் உலர்த்திப் புடைத்துச் சுத்தி செய்து விற்பனைக்கு அனுப்புகிறுர்கள்.

கேள்விகள்

1. காப்பி குடிப்பதால் ஏற்படும் நன்மை தீமைகள் யாவை ?
2. காப்பிக் கஷாயம் எவ்விதம் தயார் செய்கிறுர்கள் ?
3. காப்பிக் கொட்டை எவ்வித உருவமுள்ளதாக இருக்கிறது ?
4. நமது மாகாணத்தில் காப்பிச் செடிகள் பயிரிடப் படும் இடங்கள் எவை ?
5. காப்பிக்கொட்டைகளை எவ்விதம் சேகரிக்கிறுர்கள்?

பயிற்சி

1. உண்டாகுமென்று, வளரவிடுவதில்லை — இத் தொடர் மொழிகளைப் பிரித்து எழுது.
2. காப்பிக் கஷாயத்தில் பாலும் சர்க்கரையும் சேர்த்துப் பானம் செய்கிறுர்கள். இந்த வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலை யாவை ?
3. சாதாரணமாக, வழக்கமாக, விற்பனை—சொந்த வாக்கியங்களில் உபயோகித்து எழுது.

இலக்கணம்

பொருட்பெயர்களில் சில உயர் திணையாகவும், சில அஃறிணையாகவும் இருக்கும். இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், தொழிற்பெயர் இவை எல்லாம் அஃறிணை ஆகும்.

கீழ்க்கண்ட வாக்கியங்களிலுள்ள உயர்திணைப் பெயர்களையும், அஃறிணைப் பெயர்களையும் குறிப்பிடு :—

1. சூரியன் கிழக்கில் உதிக்கிறது.
2. உபாத்தியாயர் பாடம் கற்பிக்கிறுர்.
3. சில நாள் இரவில் சந்திரன் வெளிச்சம் தருகிறுன்.
4. மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளைத் தண்டிக்கிறுர்.



14. ஓநாயும் கொக்கும்

ஆத்திரமாக	விலங்கு	சொஸ்தம்
சிக்கி	வெகுமதி	நீதி
முயற்சி	மனம் இசைந்து	வாக்கு
நோய்	நொடி	பணி

(அபிநயப் பாட்டு)

தன்னனே தன்னனே தன்னனே
தன்னனே தன்னனே தன்னனே

ஆட்டுக் குட்டியைக் கொன்ற ஓநாய்
ஆத்திர மாகவே தின்றது தான். 1

தின்றதும் தொண்டையில் சிற்றெலும்பு
சிக்கி வருத்தம் கொடுத்ததுவே. 2

கூடிய மட்டும் எடுத்திடவே
கொள்ளை முயற்சிகள் செய்தபின்னும் 3

வெளியே எலும்பு வராததினால்
வீணான கஷ்டத்திற் குள்ளாச்சே. 4

நோயைப் பொறுக்க முடியாமல்
நொந்தே ஊளைகள் இட்டதுவே. 5

காடெங்கும் ஓடித் திரிந்ததுதான்
கண்ட பறவை விலங்குகளைத் 6

தொண்டை எலும்பை எடுத்திடவே
கோடிக் கும்பிடு போட்டதுவே. 7

ஒன்றாலும் அது கூடாமல்
ஓடியோர் கொக்கைக் கண்டதுவே. 8

"கொக்கையா ! தொண்டை எலும்பெடுத்
தால் கோடி வெகுமதி தந்திடுவேன்" 9

என்றிடக் கேட்டதும் கொக்குமனம்
இசைந்தே ஓநாயின் தொண்டையிலே 10

நீண்ட அலகைச் செலுத்தி ஒரு
நிமிஷம் எலும்பை எடுத்திடவே, 11

நோயும் நீங்கியே ஓநாயும்
நொடியினில் சொஸ்தம் அடைந்ததுவே. 12

கொக்கு வெகுமதி ஓநாயைக்
கொடுவென்று கேட்டவுடன் தானே 13

"விட்டாயே வாய்க்குள்ளே உன் தலையை,
வெடுக்கென்று கடித்திட்டால் என்ன செய்வாய் ? 14

கடியாமல் விட்டது போதாதோ ?
காணாமல் வெகுமதி ஏதேதோ ! 15

உன்னைப்போல் ஒரு நாளும் முட்டாளே
உலகத்தில் எங்குமே கிட்டாதே!'' 16

என்றே பலபல ஏசியதே,
இதனால் ஒரு நீதி பேசியதே. 17

சொன்ன சொல் காப்பாற்றித் துணிவரோ
துஷ்டர்கள்? வாக்குப் பணிவரோ? 18

கேள்விகள்

1. ஓநாய்க்கு ஏற்பட்ட கஷ்டம் என்ன?
2. நோய் பொறுக்க முடியாமல் ஓநாய் என்ன செய்தது?
3. ஓநாய் கொக்கைக் கண்டதும் அதனிடம் கேட்டுக் கொண்டது என்ன?
4. கொக்கு ஓநாயிடம் வெகுமதி கேட்டபொழுது ஓநாய் என்ன பதில் சொன்னது?
5. இப்பாடத்திலிருந்து நீ அறியும் நீதி என்ன?

பயிற்சி

1. சிற்றெறும்பு, காடெங்கும், கொடுவென்று—தொடர் மொழிகளைப் பிரித்து எழுது.
2. நீதி, வருத்தம், முட்டாள்—எதிர்ப்பதங்களை எழுது.
3. விலங்கு—இரண்டு அர்த்தம் எழுது.
4. ஓநாய் ஆட்டுக்குட்டியை ஆத்திரமாகத் தின்றது.
   (அ) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவற்றைக் குறிப்பிடு.
   (ஆ) பெயர்ச் சொற்கள் எவை? அவற்றின் வகை, திணை இவைகளைச் சொல்.
   (இ) வினைச் சொல் எது?

வியாசம் எழுதுதல்

'ஓநாயும் கொக்கும்' என்ற கதையைச் சுருக்கமாகப் பத்து வரிகளில் எழுது.

15. நெருப்பு

உலோகங்கள்	உருக்கி	ஆபரணம்
இயக்க	அஜாக்கிரதை	கையாண்டல்
விபத்து	லட்சக்கணக்கான	பெறுமான
பொறி	உயிர்துறந்தவர்	கொழுந்து
கலந்து	கலவை	சிகிச்சை

1. இந்நாளில் நாம் நெருப்பு உண்டாக்குவதற்குத் தீக்குச்சியை உபயோகிக்கிறோம். ஒரு காலத்தில் நம் முன்னோர்கள் கட்டையோடு கட்டையைத் தேய்த்து நெருப்பு உண்டாக்கி வந்தார்கள். அவர்கள் மூங்கிற் காடுகளிலுள்ள மூங்கில்களில் நெருப்பு உண்டாவதைப் பார்த்தார்கள். அம் மூங்கில்கள் காற்றினால் ஒன்றோடு ஒன்று உராய்ந்து கொண்டவுடன் நெருப்பு உண்டாகிறதென்று தெரிந்து கொண்டார்கள்; பிறகு தாங்களும் அவ்விதமாகக் கட்டையோடு கட்டையைத் தேய்த்து நெருப்பை உண்டாக்கிக் கொண்டார்கள்.



2. அப்பால் நமது முன்னோர்கள் தீ உண்டாக்குவதற்கு ஒருவிதமான கல்லைக் கண்டுபிடித்தார்கள். அந்தக் கல்லைச் சிகி

முகிக் கல் என்று சொல்வது உண்டு. இக்கல்லின் இரண்டு துண்டுகளை ஒன்ருேடு ஒன்று உராயும்படி தட்டினுல் நெருப்புப் பொறிகள் தோன்றுகின்றன. இப்பொறிகளைப் பஞ்சில் சேர்த்து நெருப்பை மூட்டினுர்கள். இந் நெருப்பின் உதவியால் இருட்டைப் போக்கியதோடு, அவர்கள் தங்கள் உணவுகளையும் சமைத்துப் பக்குவம் செய்துகொண்டார்கள்.

3. நெருப்பு உண்டாக்குவது சிரமமாக இருந்ததால், உண்டாக்கிய நெருப்பை அவர்கள் அணைத்து விடாமல் காப்பாற்றிக் கொள்ள விரும்பினுர்கள். இதற்காகக் கல்லைக் குழித்து அதில் மிருகங்களின் கொழுப்பையும் பஞ்சினுல் செய்த திரிகளையும் சேர்த்துக் கொளுத்தி வைத்துக் கொண்டார்கள்.

4. நாளடைவில் நாகரிகம் அதிகரித்தது. பலவகையான விளக்குகள் தோன்றின. உலோகங்களின் உபயோகத்தை அறிந்துகொண்ட பின், உலோகங்களால் குத்து விளக்கு முதலிய விளக்குகளைச் செய்து கொண்டார்கள். அதிக வெளிச்சம் வேண்டியிருந்த காலங்களில் நம் முன்னேர்கள் கிளை விளக்குகளையும் பலவகையான தீ வர்த்திகளையும் உபயோகித்

துக் கொண்டனர். மேல் நாட்டார்களோ மண் எண்ணெய் விளக்கு, காந்த விளக்கு முதலியவற்றைக் கண்டு பிடித்தனர்.

5. நெருப்பு நமக்குப் பலவகையிலும் பயன் படுகிறது. இதை அறியாதிருந்த காலத்தில் மக்கள் எவ்வளவு வசதிக் குறைவோடு வாழ்க்கை நடத்தி இருக்கவேண்டும். நெருப்பின் உதவியால் உலோகங்களை உருக்கிச் சுத்தப்படுத்தவும், பலவிதமான சாமான்களையும் ஆபரணங்களையும், எந்திரங்களையும் செய்யவும் முடிகிறது. நெருப்பின் உதவியால் தான் நீரை ஆவியாக மாற்றி நீராவியின் சக்தியால் ரயில் எஞ்சின் முதலியவைகளை இயக்கச் செய்கிறார்கள். நெருப்பு இல்லையானால் என்னென்ன கஷ்டங்களுக்கு உட்படவேண்டி வருமென்று யோசித்துப் பாருங்கள்.

6. நெருப்பு நமக்குப் பலவகைகளில் பயன்படுவதுபோலச் சிற்சில சமயங்களில் அதனால் நமக்குக் கஷ்டங்கள் நேரிடுவதும் உண்டு. நாம் நெருப்பை அஜாக்கிரதையாகக் கையாண்டால் பல விபத்துக்கள் நேரிடலாம். சிலரது கவனக் குறைவால் எத்தனை வீடுகள், எத்தனை வைக்கோல் போர்கள், எத்தனை வர்த்தகக் கிடங்குகள் தீக்கு இரையாகியுள்ளன. தீ விபத்துக்களால் லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான பொருள்கள் சேதமடைந்துள்ளன!

தவிர, எத்தனையோ உயிர்ச் சேதங்களும் நேரிட்டுள்ளன. ஆகையால் ஒவ்வொருவரும் நெருப்பை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். இல்லாவிட்டால், சிறு பொறி பெருந் தீ ஆகி விபத்துக்கள் நேரிடலாம்.

7. சிற்சில சமயங்களில் கவனியாமல் எரியும் விளக்கு, அடுப்பு இவற்றின் பக்கங்களில் செல்லும்பொழுது உடைகளில் தீப் பற்றிக்கொள்வதுண்டு. இவ்விதம் உடைகளில் தீப்பற்றிக் கொண்டதால் உடல் வெந்து உயிர்துறந்தவர் பலர். ஒருவரது உடையில்



தீப்பற்றிக் கொண்டால் உடனே அந்த இடத்தைக் கைகளினால் சேர்த்துப் பிடித்துக் கசக்கித் தீயை அணைக்க முயலவேண்டும். இவ்விதம் செய்ய முடியாத சமயங்களில் கீழே படுத்துப் புரளவேண்டும். எக்காரணங் கொண்டும் ஓடக்கூடாது. ஓடினால் தீ எரிவதற்கு வேண்டிய காற்று ஏராளமாகக் கிடைக்கும்;

தீ மேல் நோக்கிக் கொழுந்துவிட்டு எரிந்து உடல் வெந்து விடும்.

8. தீப்பற்றியவரின் பக்கத்தில் எவரேனும் இருப்பின், அவர் வீண் கூச்சல் போடாமல் தீப்பற்றிக் கொண்டவரைத் தரையில் புரளச் செய்ய வேண்டும். சமீபத்தில் சாக்கு, கம்பளம், ஜமுக்காளம் ஏதாவது இருந்தால் அதைக்கொண்டு தீப்பற்றியவரை மூடிப் புரளச் செய்யலாம். இவ்விதம் செய்வதால் தீ எரிவதற்கு வேண்டிய காற்று கிடையாமல் அணைந்து விடும். தீயை அணைக்கும் பொருட்டுத் தீப்பற்றி எரிபவர் மீது தண்ணீர் ஊற்றக் கூடாது. மண்ணாவது மணலாவது சமீபத்தில் இருந்தால் அதை எறிந்து தீயை அணைக்கலாம்.

9. உடையில் பற்றிய தீயை அணைத்த பிறகு, தீயினால் ஏற்பட்ட புண்களின் மீது படிந்துள்ள துணியை மெதுவாக நீக்க வேண்டும். பெரிய கொப்புளங்கள் இருந்தால் சுத்தமான குண்டூசியால் அவற்றைக் குத்தி அவற்றிலுள்ள நீரை வெளிப்படுத்த வேண்டும். தேங்காயெண்ணெயை யாவது ஆளி விதை எண்ணெயையாவது சுண்ணாம்பு நீருடன் கலந்து அக்கலவையில் சுத்தமான துணியை நனைத்தும் புண்களின்மீது போடலாம். பெரிய புண்கள் ஏற்பட்டிருந்தால் உடனே வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்யவேண்டும்.

கேள்விகள்

1. முன்னோர்கள் முதன்முதலில் எவ்விதம் நெருப்பை உண்டாக்கிக் கொண்டார்கள் ?

2. நெருப்பு அணைந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்ள முன்னோர்கள் என்ன செய்தார்கள் ?

3. நெருப்பினால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் என்ன ?

4. ஒருவர் உடையில் தீப்பற்றிக் கொண்டால் அவர் அத்தீயை அணைக்க என்ன செய்யவேண்டும் ?

5. பக்கத்திலுள்ளவர் என்ன செய்யவேண்டும் ?

6. தீயால் சுட்ட புண்களை ஆற்ற என்ன சிகிச்சை செய்யலாம் ?

பயிற்சி

1. நாளடைவில் நாகரிகம் அதிகரித்தது. பல வகையான விளக்குகள் தோன்றின.—ஒரு வாக்கியமாகச் சேர்த்து எழுது.

2. முன்னோர்கள் நெருப்பின் உதவியால் இருட்டைப் போக்கியதோடு தங்கள் உணவுகளையும் சமைத்துப் பக்குவம் செய்து கொண்டார்கள்.—இந்த வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

இலக்கணம்

எட்வின், லீலா, பையன்கள், பெண்கள், மக்கள்— இவை உயர்திணைப் பெயர்கள்.

எட்வின்—ஓர் ஆணை உணர்த்துவதால் ஆண்பாற் பெயர்.

லீலா—ஒரு பெண்ணை உணர்த்துவதால் பெண்பாற் பெயர்.

பையன்கள்—ஒன்றுக்கு அதிகமான ஆண்களைக் குறிக்கின்றது.

பெண்கள்—ஒன்றுக்கு அதிகமான பெண்களைக் குறிக்கின்றது.

மக்கள்—ஒன்றுக்கு அதிகமான ஆண் பெண் ஆகிய இருபாலரையும் குறிக்கின்றது.

இவ்விதம் பல ஆண்களைக் குறிக்கும் சொல், பல பெண்களைக் குறிக்கும் சொல், ஆணும் பெண்ணும் சேர்ந்த கூட்டத்தாரைக் குறிக்கும் சொல் பலர்பாற் பெயர்.

'பால்' என்றால் 'வகுப்பு' என்று பொருள்படும். ஆண்பால், பெண்பால், பலர்பால் இவை மூன்றும் உயர் திணைப் பெயர்களுக்கு உரியன.

மாடு, குதிரைகள்—இவை அஃறிணைப் பெயர்கள்.

மாடு—ஒன்றைக் குறிக்கும் அஃறிணைப் பெயர். இது ஒன்றன்பாற் பெயர்.

குதிரைகள்—ஒன்றுக்கு அதிகமானவைகளைக் குறிக் கும் அஃறிணைப் பெயர். இது பலவின்பாற் பெயர்.

ஒன்றன் பால், பலவின் பால் இவை இரண்டும் அஃறிணைப் பெயர்களுக்கு உரியன.

கீழ்க்கண்ட சொற்களின் பாலைக் கூறு :—

அரசன், பூ, மகன், குளம், ஆடுகள், சிங்கம், தாய், மனிதர், பெண்கள், சிறுவன், புத்தகங்கள்.

16. பறவைக் கூடு

புகாதபடி	திறமையாக	வலுத்து
நேர்த்தியாக	ஜாக்கிரதையாக	இழை
ஆயுதங்கள்	அரண்மனை	மெல்லிய

1. சில பெரிய மரங்களின் நுனிக்கிளை களில் குருவிக்கூடுகள் பூக்குடலைகள்போல் தொங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். எவரும் எட்டிப் பிடித்துக் கொள்ளாமலிருக்கும்

படி குருவிகள் அவ்வளவு உயரத்தில் கூடுகளைக் கட்டுகின்றன. மழை அடைத்துப் பெய்தாலும் கூடுகளுக்குள் நீர்த்துளி சிறிதும் புகாதபடி அவை அமைக்கப் படுகின்றன.

2. பறவைக் கூடுகள் பறவைகளுக்கு வசதியாக இருப்பதோடு பார்வைக்கு நேர்த்தியாகவும் இருக்கின்றன. நாம் வீடு கட்டி வாழ்வதுபோல் பறவைகள் கூடு கட்டி வாழ்கின்றன. நாம் வீடு கட்டுவதற்குச் செங்கல், சுண்ணும்பு, மரம் முதலியவற்றை உபயோகிக்கின்றோம். பறவைகளோ நார், வைக்கோல், கோரைப்புல், முள், சுள்ளி, தழை முதலியவற்றால் தங்கள்

கூடுகளை அமைத்துக் கொள்கின்றன. நாம் வீடு கட்டுவதற்குப் பல வகையான ஆயுதங்களை உபயோகிக்கிறோம். ஆனால் பறவைகள் தங்கள் கூர்மையான அலகினாலேயே அழகான வீடுகளைத் திறமையாகப் பின்னிவிடுகின்றன.

3. நாம் வீடு கட்டுவதற்கு வசதியாக வுள்ள இடத்தைத் தேடிக் கண்டுபிடிக்கிறோம் அல்லவா? அப்படியே பறவைகளும் கூடுகள் கட்டுவதற்காக வசதியான இடம் வேண்டுமென்று மரத்திற்கு மரம் தேடிப் பார்க்கின்றன. கீழே விழாதபடி வீடுகளை நாம் ஜாக்கிரதையாக அமைத்துக் கட்டுவதுபோல், பறவைகளும் தங்கள் கூடுகள் இலேசில் கீழே விழுந்து விடாதபடி அவற்றை அதி ஜாக்கிரதையாக அமைக்கின்றன. நாம் பலவகையான வீடுகள் கட்டுவதுபோல், பறவைகளும் பலவிதமான கூடுகளைக் கட்டுகின்றன.

4. பறவைக் கூடுகளுக்குள் ஓர் அரண் மனைபோல் இருப்பது தூக்கணாங் குருவியின் கூடு. நாம் துணி நெய்வதுபோல் இக்குருவியும் வலுத்து மெல்லியதாயிருக்கும் நார் இழைகளைக் குறுக்கும் நெடுக்குமாக ஓட்டித் தன் கூட்டை அழகாக முடைகிறது. இதனால் இக்குருவியை **நெசவுக்காரப் பறவை** என்றும் சொல்லலாம்.

5. மனிதர்களில் சோம்பேறிகள் இருப்பதுபோல், பறவைகளிலும் சில சோம்பேறிகள் காணப்படுகின்றன. இப்பறவைகளுக்குக் கூடுகட்டவேண்டும் என்ற விருப்பமே இல்லை.

கேள்விகள்

1. பறவைகள் எங்குக் கூடுகளைக் கட்டுகின்றன ?

2. பறவைகள் எவற்றால் தங்கள் கூடுகளை அமைத்துக் கொள்கின்றன ?

3. பறவைகள் கூடு கட்டுவதை எந்த வகையில் நாம் வீடு கட்டுவதற்கு ஒப்பிடலாம் ?

4. நெசவுச்காரப் பறவை என்பது எது ? காரணம் என்ன ?

பயிற்சி

1. மழை அடைத்துப் பெய்தாலும்—அர்த்தம் என்ன ?

2. ஜாக்கிரதை, பலவகை—எதிர்ப்பதங்களை எழுது.

3. மரத்திற்கு மரம், குறுக்கும் நெடுக்குமாக—வாக்கியங்களில் அமைத்து எழுது.

இலக்கணம்

1. மகாராணி, மனைவி, தாய், வேலைக்காரி, மகள்—ஆண்பாற் பெயர்களை எழுது.

2. பிச்சைக்காரன், குருடன், பேரன், உபாத்தியாயர்—பெண்பாற் பெயர்களை எழுது.

17. மழை

மட்கலம்	திரவப் பொருள்	வானம்
வார்த்து	வெப்பம்	தானம்
வற்றிப்போகிற	சூட்சுமமாக	மாரி
ஆவி ரூபமாய்	சஞ்சரிக்கின்றன	பழமொழி
மீண்டும்	சொற்பமாக	இன்றியமையாதது

1. மத்தியான்ன வேளையில் வெய்யில் காயும்பொழுது ஒரு மட்கலத்திலே கொஞ்சம் தண்ணீர் வார்த்து அதை வெய்யிலில் வைத்துப் பாருங்கள். சற்று நேரத்திற்குள் அந்தத் தண்ணீர் வற்றிப் போகிறது அல்லவா? வேறொரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சிப் பாருங்கள். சிறிது நேரத்தில் அப்பாத்திரத்தினுள்ள தண்ணீரும் வற்றிப் போகிறது. அவ்விதமாக வற்றிப் போகும் தண்ணீர் எங்கே சென்று மறைந்து விடுகிறது?



2. தண்ணீரைக் காய்ச்சும் பாத்திரத்திற்குச் சற்று உயரத்தில் குளிர்ச்சிபொருந்திய பொருளாகிய கற்பலகை ஒன்றைப் பிடித்துப் பாருங்கள். அதன்மீது நீர்த்துளிகள் படிவதைக் காண்பீர்

கள். தண்ணீரைக் காய்ச்சியவுடன் அது ஆவி ரூபமாய் மாறி மேலே போகிறது. அந்த ஆவி கற்பலகையின் மேற்பட்டுக் குளிர்ச்சி அடைந்து, மீண்டும் தண்ணீராகிய திரவப் பொருளாக மாறிவிடுகிறது. இப்படி மாறின வுடன் அதை நாம் நீர்த்துளியாகப் பார்க் கிறோம்.

3. நெருப்பின் வெப்பத்தால் தண்ணீர் ஆவியாக மாறிப் போவதைப்போல், வெய்யி லிற் காயும் நீரும் சூரிய வெப்பத்தால் நமது கண்களுக்குத் தோன்றுவதில்லை. இப்படியே கடல் நீரும் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறிச் செல்லுகிறது. இந்த நீராவி காற்றைக் காட்டிலும் இலேசானது. ஆகையால் அது மேலே செல்லுகிறது. இவ்விதமாக ஆறு, ஏரி, கடல் முதலிய நீர் நிலைகளிலுள்ள தண்ணீர் நாள்தோறும் சூரிய வெப்பத்தால் நீராவியாகி மேலே சென்று கொண்டிருக்கிறது. இந்த நீராவி எக்காரணத்தினாலாவது குளிர்ச்சி அடைந்தால், அது நமது கண்ணுக்குத் தோன் றும் கருமையான உருவத்தை அடைகிறது. இவ்வுருவத்தை அடையும் நீராவித் திரட்சி யைத்தான் **மேகம்** என்று சொல்கிறோம்.

4. மேகங்கள் பூமிக்கு மேல் இரண்டு அல்லது மூன்று மைல் உயரத்தில் சஞ்சரிக் கின்றன. பஞ்சு முதலிய இலேசான பொருள்

கள் காற்றில் பறப்பதுபோல, மேகங்களும் காற்றில் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றன. இந்த மேகங்களின் மீது குளிர்ந்த காற்று வீசும் பொழுது மேகத்திலுள்ள நீராவி நீர்த்துளிகளாக மாறுகிறது. நீர்த் துளிகள் காற்றைவிட கனமுள்ளன வாகையால் அவை மழையாகப் பூமியில் விழுகின்றன. மலைகளில் பெய்யும் மழைத் தண்ணீர் அருவியாகவும் சிற்ருருகவும் பேராருகவும் பெருகி நமது பூமியைச் செழிப்பாக்குகிறது.

5. மலைகளும் காடுகளும் இல்லாத இடங்களில் மழை சொற்பமாகவே பெய்யும். காலம் தவருது மழை பெய்தால், மனிதர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெற்று மகிழ்ச்சி அடைவார்கள். 'வானம் சுருங்கில் தானம் சுருங்கும்', 'மாரி அல்லது காரியம் இல்லை', 'மழை பெய்தால் மண் சிறக்கும்' முதலான பழமொழிகள் மழை நமக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை வெளியிடுகின்றன.

6. மழையினுல் பல நன்மைகள் ஏற்படுவனபோல் சிற்சில கெடுதல்களும் ஏற்படுவதுண்டு. அதிக மழை பெய்வதால் ஆறுகளில் பெருவெள்ளம் ஏற்பட்டுப் பல ஊர்கள் பாழாகி உயிர்ச்சேதமும் ஏற்படுவதுண்டு. அதிக மழையால் பல பயிர்கள் நாசமடையும்.

ஆகவே மழை பெய்யாமலாவது, மிகுதியாகப் பெய்தாவது கெடுதி செய்யும் வன்மை உடையது. இவ்விதம் கெட்டுப்போனவர்களுக்கு ஆதரவாக நின்று காலந் தவருமல் பெய்து அவர்களை வாழ்விப்பதும் மழையே தான். ஆகையால் திருவள்ளுவர்,

" கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் ருங்கே
எடுப்பதூஉ மெல்லாம் மழை '

என்று கூறியுள்ளார்.

கேள்விகள்

1. ஆற்றிலுள்ள நீராவி நமது கண்களுக்கு ஏன் புலப்படுவதில்லை ?
2. மேகங்கள் எவ்விதம் ஏற்படுகின்றன ?
3. மழை இன்றியமையாதது என்பதைத் தெரிவிக்கும் மூன்று பழமொழிகளை எழுது.
4. மக்களைத் தாழ்விப்பதும் வாழ்விப்பதும் செய்ய வல்லது மழை என்பதைத் திருவள்ளுவர் எவ்விதம் கூறியுள்ளார் ?

வியாசம் எழுதுதல்

மழையால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி எட்டு வரிகள் எழுது.

பயிற்சி

1. மட்கலம்—பிரித்து எழுது.
2. நாள்தோறும், காலம் தவருது, சொற்பமாக, இன்றியமையாதது — வாக்கியங்களில் உபயோகித்து எழுது.
3. சிற்ருறு—எதிர்ப்பதம் என்ன ?

இலக்கணம்

கற்பலகை—இது ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல். இவ்விதம் ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எண்.

கற்பலகைகள்—இது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் களைக் குறிக்கும் பெயர்ச்சொல். இவ்விதம் ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிப்பது பன்மை எண்.

கீழ்க்கண்ட ஒருமைப் பெயர்களுக்குப் பன்மைப் பெயர்களை எழுதுக :—பூ, ஈ, வேஷ்டி, நாற்காலி, பல், அரசன்.

கீழ்க்கண்ட பன்மைப் பெயர்களுக்கு ஒருமைப் பெயர் களை எழுதுக :—மேகங்கள், அருவிகள், மலைகள், காடுகள், உணவுப் பொருள்கள், முட்கள், மந்திரிமார்.

18. வௌவால்

விளைந்தது	வெற்றி	ஜோலி
கடுமையாய்	மீண்டது	விசையாய்
இருதிறத்தார்	சமாதானம்	போர்
வல்லமை	விமரிசையாக	சந்து
மார்க்கம்	புட்கள்	ஸ்திர புத்தி

(ஆனந்தக் களிப்பு)

1. விலங்கிற்கும் பறவைக்கும் சண்டை—முன்னால்
விளைந்தது கடுமையாய்; இருதிறத்தாரும்
2. சமமான வல்லமை கொண்டார்; அதனால்
சண்டை நடந்தது நாள் பல வாக.
3. வௌவால் மாத்திரம் தனியாய்—ஒரு
வகையிலும் சேர்ந்திட மார்க்க மில்லாமல்
4. வெற்றி யெங்கேயுண்டோ அங்கே—வெகு
வேகமாய்ச் சென்றுதன் உறவுகொண்டாட

5. பறவைகள் தோற்றன ஒருநாள்—வௌவால்
பரபரப்பாய் "உண்டோ பறவைக்கும் பற்கள் ?
6. குஞ்சுக்குப் பாலூட்டும் சக்தி—உங்கள்
குலத்துக்கேயுண்டோ ? நான் பறவையே அல்ல,"
7. என்றே திரும்பிய தொருநாள்—விலங்
கெல்லாந் தோற்றே யிருந்திடச் சென்று
8. "விலங்குக்கும் சிறகுகள் உண்டோ ?"—என்றே
வேடிக்கையாகச் சொல்லிமீண்டது வௌவால்.
9. சண்டை முடிந்தபின் எங்கும்—சமா
தான மிகுந்து விளங்க ஒருநாள்,
10. விலங்குகள் பறவைகள் எல்லாம்—வெகு
விமரிசை யாக விருந்தொன்று செய்தன.
11. வௌவால் மாத்திரம் எங்கும்—இடம்
வாய்க்கப் பெருமல் அலைந்தது புட்கள்
12. "நீயோ பறவையன் றென்ருய்—இந்த
நேரத்திலேயுனக் கிங்கென்ன ஜோலி !"
13. என்றே துரத்தின விசையாய்—"போரில்
எங்களுடன் சேர வில்லையே நீதான் !
14. போ ! போ !" வென்று கூறி—வெளியே
போக அடித்தன மிருகங்க ளெல்லாம்.
15. அன்று முதலின்று காறும்—வௌவால்
ஆருக்கும் கண்ணில் படாது மறைந்து,
16. சந்திலும் பொந்திலும் தங்கிப்—பகல்
தன்னைக் கழித்தே இருட்டில் திரியும்.
17. விலங்கொடு பறவைகள் கண்ணில்—பட்டால்
வேகமாய்ச் சென்று மறைந்திடும் இதனுல்
18. புலனுகக் கூடிய நீதி—ஸ்திர
புத்தியில் லாதவர் கஷ்டங்கள் படுவார்.

கேள்விகள்

1. பறவைகள் தோற்றதும் வௌவால் என்ன சொன்னது ? விலங்குகள் தோற்றதும் என்ன சொன்னது ?

2. விலங்குகளும் பறவைகளும் நடத்தின விருந்திற்கு வௌவால் போனபொழுது அவை என்ன செய்தன ?

3. அன்று முதல் வௌவால் எவ்விதம் வாழ்ந்து வருகிறது ?

4. இக்கதையிலிருந்து நீ அறியும் நீதி என்ன ?

வியாசம் எழுதுதல்

இந்தப் பாடத்திற் சொல்லப்பட்ட கதையைப் பன்னிரண்டு வரிகளில் எழுதுக.

இலக்கணம்

நான், யான், நாம், நாங்கள், யாம், யாங்கள்—இவை பேசுகிறவர் தம்மைக் குறிக்க உபயோகிக்கும் பெயர்ச் சொற்கள். இவை தன்மை இடத்திலுள்ள பெயர்ச் சொற்கள்.

நீ, நீர், நீங்கள்—இவை தன் எதிரேயுள்ளவரைக் குறிக்க உபயோகிக்கும் பெயர்ச்சொற்கள். இவை முன்னிலை இடத்திலுள்ள பெயர்ச்சொற்கள்.

அவன், அவள், அது, அவர், அவர்கள், அவை, அவைகள்—படர்க்கை இடத்திலுள்ள பெயர்ச் சொற்கள். தன்மை, முன்னிலை என்ற இரண்டு இடங்களும் அல்லாத பெயர்ச்சொற்கள் எல்லாம் படர்க்கைப் பெயர்ச்சொற்கள்.

நீயும் நானும் பள்ளிக்கூடத்திற்குப் போவோம். இந்த வாக்கியத்திலுள்ள பெயர்ச்சொற்களின் வகை, திணை, பால், எண், இடம் இவைகளைச் சொல்.

19. அதிவீரராம பாண்டியர்

ஆண்ட	மொழிபெயர்த்தார்	பிற்பகுதி
வம்சம்	உலக விஷயம்	முறை வேண்டுதல்
தமையனுர்	கண்ணுற்ற	கட்சிக்காரர்
பாண்டித்தியம்	திறமை	தீர்ப்பு
சம்ஸ்கிருதம்	வாழ்நாள்	பரம்பரை

1. பாண்டி நாட்டை ஆண்ட மன்னர்கள் பாண்டியராவார்கள். பாண்டியநாடு இராம நாதபுரம், மதுரை, திருநெல்வேலி என்னும் ஜில்லாக்களைக் கொண்டது. இப்பாண்டியர் கள் வம்சத்திலே சுமார் முந்நூறு வருடங் களுக்கு முன் அதிவீரராம பாண்டியர் என்பவர் தோன்றினுர். இவர் தென்காசியிலிருந்து சிற்றரசராக ஆண்டு வந்தார். இவருக்கு வரதுங்கராம பாண்டியர் என்ற தமையனுர் இருந்தார். அவர் கரிவலம்வந்தநல்லூரில் அரசராக இருந்து வந்தார்.

2. அதிவீரராம பாண்டியருக்குத் தமிழி லும் சம்ஸ்கிருதத்திலும் நல்ல அறிவு நிறைந் திருந்தது. இவரைப் போலவே இவர் தமை யனுரும் தமையனுர் மனைவியும் நல்ல தமி ழறிவு உடையவர்கள். அதிவீரராமபாண்டியர் சம்ஸ்கிருதத்திலுள்ள நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் பாடல்கள் யாவும் உலக விஷயங்களைப் பற்றியவையாகவே இருந்தன.

3. ஒரு சமயம் அவர் வடமொழியிலுள்ள நைடதத்தைத் தமிழில் மொழி பெயர்த்து அதனைத் தமது தமையனரிடம் விடுத்தார். அதைக் கண்ணுற்ற வரதுங்க ராம பாண்டியர் அதிவீரராம பாண்டியர் தமது கவிபாடும் திறமையை வீணுக மனிதரைப் புகழ்வதிலே செலுத்துவதைக் கண்டு மிகவும் வருந்திஞர். பின்னர் அவர் அதிவீரராம பாண்டியருக்குக் கடவுளைப் பற்றிப் பாடும்படி நற்புத்தி கூறிஞர்.

4. அன்று முதல் அதிவீரராம பாண்டியர் தமையனருடைய நற்புத்திமதியைச் சிரமேற் கொண்டு, தமது வாழ்நாளின் பிற்பகுதி முழுவதையும் சிவபெருமான் மீது பாடுவதிலேயே செலவிட்டார். இவரியற்றிய நைடதம் மிகச் சிறந்த நூலாகும். அக் காலத்திய திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பை முடிக்கும் இளைஞர்களுக்குக் கடைசியாக நைடதம்தான் சொல்லிக் கொடுப்பது வழக்கம்.

5. அதிவீரராம பாண்டியர் சிறுவர்களின் பொருட்டு நறுந்தொகை என்னும் வெற்றி வேற்கையைப் பாடியிருக்கிருர். கல்வியின் உயர்வு, செல்வம் நிலையாமை என்பவற்றைச் சிறுவர்கள் எளிதில் அறியுமாறு அவர் அந்த நூலிற் பாடியிருக்கிருர்.

6. இவரியற்றிய இவ் வெற்றிவேற்கையிலே அரசன் தன்னிடம் முறை வேண்டி வரு

கிறவர்களுடைய சொற்களை ஏழுதரம் கேட்டு இரண்டு கட்சிக்காரர்களுக்கும் பொருந்தும் படியாகத் தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்றும், அப்படித் தீர்ப்புச் சொல்லாவிட்டால் வழக்கிழந்தவர்கள் அழும் கண்ணீர் அரச பரம்பரையை அடியோடு அறுக்கும் வாள் என்றும் கூறுகின்றார். இதனால் இந்த அரசர் தம்முடைய ஆட்சியில் எவ்வளவு ஒழுங்காக நீதி செலுத்தியிருப்பார் என்பதை நாம் உணரலாம்.

கேள்விகள்

1. பாண்டியநாடு என்பது எந்த ஜில்லாக்கள் கொண்டது?
2. அதிவீரராம பாண்டியர் எந்த மொழிகளில் தேர்ந்தவர்?
3. அவர் பாடிய நூல்களில் இரண்டு சொல்.
4. அவர் பாட்டுகளைச் சிவபிரான்மீது பாடக் காரணம் யாது?
5. அரசனிடம் வரும் வழக்குகளை அரசன் எப்படி விசாரித்து முடிவு கூற வேண்டும்?

பயிற்சி

1. சுமார், ஒரு சமயம், கண்ணுற்ற, வீணாக, வழக்கம்—தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.
2. நற்புத்தி, புகழ்வது, பிற்பகுதி, முடிக்க, நீதி, உயர்வு, கடைசியாக—எதிர்ப்பதங்கள் எழுது.
3. வாள், வால்—அர்த்த வித்தியாசம் விளங்கும்படி தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

20. கோழி வளர்த்தல்

புதுமாதிரி	அயல்நாட்டு	ஒரேமாதிரி
இனங்கள்	சராசரி	அடைகாக்க
தீவனம்	பிடி	தானியங்கள்
கழிவு	கலவை	போதிய
உடல் நலம்	திறன்	கொட்டடி
காற்ரோட்டம்	கிருமிகள்	உண்ணி
விரோதிகள்	பாதுகாக்க	குடிசைத் தொழில்

[சுந்தரம் தன் நண்பன் ஜோசப் வீட்டிற்குப் போகிறான். அங்கே புதுமாதிரியான கோழிகளைப் பார்க்கிறான்.]

சுந்தரம் : ஜோசப், இந்தக் கோழிகள் நாட்டுக் கோழிகளைப் போல் இல்லையே! இவை என்ன கோழிகள்?

ஜோசப் : சுந்தரம், இவை நம் நாட்டுக் கோழிகள் அல்ல; இவை அயல் நாட்டு ஜாதிக் கோழிகள்.

சுந்தரம் : இந்த ஜாதிக் கோழிகள் எல்லாம் ஒரே மாதிரியாக இல்லையே!

ஜோசப் : அயல் நாட்டு ஜாதிக் கோழிகளிலும் பல இனங்கள் உண்டு. அதோ, உருவத்தில் பெரியதாக ஒரு கோழி இருக்கிறது, பார். அது ரோட் ஐலண்டு ரெட்ஸ் என்னும் ஜாதிக் கோழி. அதோ இருக்கும் வெள்ளை நிறமான கோழி லெக்கார்ன் எனப்படும். அதோ இருக்கும் கறுப்பு நிறமான கோழி

மைனர்க்கா எனப்படும். இந்த இனத்தில் வெள்ளை நிறமான கோழிகளும் உண்டு.



1, 2. ரோட் ஐலண்டு ரெட்ஸ் ஜாதிக் கோழிகள் 3. லெக்கார்ன், 4. மைனர்க்கா.

ஆனால் கறுப்பு மைனர்க்காவையே பலர் விரும்பி வளர்க்கிறார்கள்.

சுந்தரம் : ஜோசப், உங்கள் வீட்டில் நம் நாட்டுக் கோழிகளை வளர்க்காமல் அயல் ஜாதிக் கோழிகளை ஏன் வளர்க்கிறார்கள்.

ஜோசப் : நம் நாட்டுக் கோழிகள் வருஷத்தில் மூன்று முறையாக 30 முதல் 60 முட்டைகள் வரைதான் இடுகின்றன. அயல் நாட்டு ஜாதிக் கோழிகளோ வருஷத்தில் 180 முட்டைகள் வரை இடுகின்றன. ஆகையால்தான் அயல் நாட்டு ஜாதிக் கோழிகளை வளர்க்கிறோம்.

சுந்தரம் : இந்தக் கோழிகளுக்கு என்ன தீவனம் போடுகிறீர்கள்?

ஜோசப் : ஒவ்வொரு கோழிக்கும் காலையிலும் மாலையிலும் இரண்டு பிடி தானியங்களைக் கொடுக்கிறோம். மாலையில் அவைகளுக்குக் கொஞ்சம் மோர் குடிக்கக் கொடுப்போம். தவிர, புல்நுனிகளையும் வீட்டில் சேரும் காய்கறிக் கழிவுகளையும் அவைகளுக்குத் தீவனமாகப் போடுவோம்.

சுந்தரம் : என்னென்ன தானியங்களைத் தீவனமாகக் கொடுப்பீர்கள்?

ஜோசப் : நெல், கேப்பை, கம்பு, சோளம் முதலிய தானியங்களைத் தீவனமாகக் கொடுப்போம். தானியங்களும் காய்கறிக் கழிவுகளும் மட்டும் தீவனமாகக் கொடுத்தால் போதாது. மீன் தீவனம், மாமிசம், கறையான் முதலியனவும், தவிடு, பிண்ணுக்கு முதலியனவும் தீவனமாகக் கொடுக்க வேண்டும்.

சுந்தரம் : அந்தப் பாத்திரத்திலிருந்து அந்தக் கோழி எதையோ எடுத்துத் தின்கிறதே? அது என்ன தின்கிறது ?

ஜோசப் : அந்தப் பாத்திரத்தில் சுண்ணும்புக்கல் தூளும் எலும்புத் தூளும் சேர்ந்த கலவை இருக்கிறது. அதைத்தான் கோழி தின்கிறது.

சுந்தரம் : அந்த மண் தொட்டியில் என்ன இருக்கிறது ?

ஜோசப் : அந்த மண் தொட்டியில் கோழிகள் குடிப்பதற்கு வேண்டிய சுத்தமான நீர் இருக்கிறது. கோழிகளுக்குப் போதிய நீர் ஏற்ற வேளைகளில் கிடைக்க நாம் வசதி அளிக்க வேண்டும். அவை போதிய நீர் குடிக்காவிட்டால் அவற்றின் உடல் நலம் கெடும் ; முட்டையிடும் திறனும் குறையும்.

சுந்தரம் : ஜோசப், அது என்ன கூண்டு ?

ஜோசப் : அதுதான் கோழிகளை அடைத்து வளர்ப்பதற்கான கூண்டு. நாங்கள் நாலைந்து கோழிகள்தான் வளர்க்கிறோம். ஆகையால் இது போன்ற கூண்டு செய்து வைத்திருக்கிறோம். சிலர் முப்பது கோழிகள் வரை வளர்ப்பார்கள். அவர்கள் கோழிகளுக்காக ஒரு கூரை வேய்ந்த கொட்டடி அமைத்துக் கொள்வார்கள்.

சுந்தரம்: நான் ஒரு நாள் எங்கள் உழவனுடைய வீட்டிற்குப் போயிருந்தேன். அவனும் ஐந்தாறு கோழிகள் வளர்க்கிருன்.



ஆனல் கோழிக்கூடு ஒரு திண்ணையில் அமைக்கப்பட்டிருக்கிறது. மிகவும் சிறியதாயும் இருட்டாயும் இருக்கிறது.

ஜோசப்: இருட்டான அறைகளில் கிருமிகள் விருத்தியாகும். அவ்வித அறைகளில் வளரும் கோழிகளின் மீது பேன், உண்ணி முதலியன எளிதில் பற்றும். ஆகையால் எங்கள் வீட்டிலுள்ள கூண்டைப் போலக் கூண்டை அமைத்துக் கொள்ள வேண்டும். தவிர, தினமும் கூண்டைச் சுத்தம் செய்து கோழிகள்மீது பூச்சிகள் பற்ருது பார்த்துக் கொள்ள வேண்டும்.

சுந்தரம்: ஜோசப், உங்கள் வீட்டில் கோழிகளை நன்ருக வளர்க்கிறீர்கள்.

ஜோசப் : கோழிகளைச் செவ்வனே வளர்த்தால்தான் லாபம் பெறமுடியும்.

சுந்தரம் : நானும் என் தந்தையிடம் சொல்லி சில கோழிகள் வாங்கி வளர்க்கப் போகிறேன்.

ஜோசப் : அவ்விதமே செய். கோழிகளை வளர்த்தல் ஒரு சிறந்த குடிசைத் தொழிலாகும்; சந்தோஷமாகவும் நேரம் போக்கலாம்.

கேள்விகள்

1. அயல்நாட்டு ஜாதிக் கோழிகளில் சில இனங்களைச் சொல்.
2. நம் நாட்டுக் கோழிகளை வளர்ப்பதைவிட அயல் நாட்டுக் கோழிகளை வளர்ப்பது நல்லது, ஏன் ?
3. கோழிகளுக்கு என்னென்ன தீவனமாகக் கொடுக்க வேண்டும் ?
4. கோழிகளுக்குப் போதிய நீர் குடிக்கக் கிடைக்கும்படி செய்வது ஏன் அவசியம் ?

பயிற்சி

1. நண்பன்—இதே பொருள் தரும் வேறு இரண்டு சொற்கள் எழுது.
2. ஒரே மாதிரி, பெரியதாக, உண்டு, அதிகம், பலர்,—எதிர்ப்பதம் எழுது.

இலக்கணம்

இராமன் பார்த்தான்.

இராமனைப் பார்த்தான்.

'இராமன்' என்னும் பெயர்ச்சொல் 'இராமனை' என்று மாறும்பொழுது அர்த்தத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது. 'இராமன்' என்னும் பெயரோடு 'ஐ' என்ற

உருபைச் சேர்த்தால் 'இராமனை' என்று மாறுவதைக் கவனி.

'ஐ' என்பது வேற்றுமை உருபு ஆகும்.

பெயர்ச் சொற்களுக்கு எட்டு வேற்றுமை உண்டு.

இராமன்—இது முதல் வேற்றுமையிலுள்ள பெயர்ச் சொல். இதற்கு உருபு இல்லை.

இராமனை—இது இரண்டாம் வேற்றுமையிலுள்ள பெயர்ச் சொல். இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ'.

கோழிக்கூண்டு மரப்பலகையால் செய்யப்படுகிறது. மரப் பலகையால்—இது மூன்றும் வேற்றுமைப் பெயர்ச் சொல். 'ஆல்' மூன்றும் வேற்றுமை உருபு. 'ஓடு' 'உடன்' என்பனவும் மூன்றும் வேற்றுமை உருபுகள் ஆகும்.

இப்பாடத்தில் முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமைப் பெயர்ச் சொற்களில் வகைக்கு மூன்று எடுத்து எழுது.

21. மண் எண்ணெய்

பிரதேசம்	எளிதில்	பூகம்பம்
திரவம்	அபாயம்	அளித்த
ஊற்று	புயல் காற்று	கசிந்து

1. எள்ளிலிருந்து எடுக்கும் நெய் அல்லது தைலம்தான் ஆதியில் **எண்ணெய்** என்ற பெயர் பெற்றது. பிறகு எள்ளைத் தவிர வேறு விதைகளிலிருந்து எடுத்த தைலங்களுக்கும் எண்ணெய் என்ற பெயர் நமது நாட்டில் ஏற்பட்டது. சில பிரதேசங்களில் நிலத்தைத் தோண்டும்பொழுது எரியும் குணத்தையுடைய ஒருவகையான திரவம் ஊற்றுப்போல் பெருகி

வருகிறது. இத் திரவத்தைத்தான் **மண் எண்ணெய்** என்று சொல்லுகிறோம்.

2. இதன் விலை குறைவாக இருக்கிறது. இதில் தீ எளிதில் பற்றிக்கொள்ளும். இந்த எண்ணெய்விட்டு எரிக்கும் 'ஹரிக்கன் விளக்கு' பெருங்காற்றிலும் அணையாது ; மேலும் விளக்கைக் கஷ்டமின்றி நாம் சுத்தம்செய்துகொள்ளலாம். இப்படிப்பட்ட காரணங்களால் மண் எண்ணெய், நம் நாட்டிலுள்ள கிராமங்களிலும் இப்பொழுது அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. எனினும் இதை உபயோகிப்பதில் சில சமயங்களில் எச்சரிக்கைக் குறைவினால் அபாயமும் ஏற்படுவது உண்டு.

3. மண் எண்ணெய் முக்கியமாக ருஷியாவிலும் பர்மாவிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கிடைக்கிறது. பர்மா எண்ணெய் முழுமையும் நமது தேசத்தில் முன் செலவழிந்து வந்ததால் அதுகூடப் போதாமல், ருஷியா எண்ணெயும், அமெரிக்கா எண்ணெயும் நமது நாட்டுத் துறைமுகங்களில் வந்து இறங்கின. இப்பொழுது பற்பல காரணங்களால் மண் எண்ணெய் முன்போலக் கிடையாதிருப்பினும், விரைவில் முன்போல நமக்கு ஏராளமான மண் எண்ணெய் கிடைக்கும்.

4. பிள்ளைகளே, மண் எண்ணெய் பூமிக்குள் எவ்விதமாக வந்து சேர்ந்தது

என்பது உங்களுக்குத் தெரியுமா ? முன்னொரு காலத்தில் நாம் வசிக்கும் உலகத்தின் பல பகுதிகளிலும் காடுகள் அடர்ந்திருந்தன. அக் காடுகளிலுள்ள பெரிய மரங்கள் புயற்காற்றினாலும் பூகம்பம் முதலிய காரணங்களாலும் கீழே விழுந்து பூமிக்குள் புதைந்து போயின.

5. புதைந்து கிடந்த மரங்கள் முதலியவற்றை மண்மேடுகள் அழுத்த ஆரம்பித்ததும் அம்மரங்களுக்குள் இருந்த எண்ணெய்ச் சத்து கசிந்து மண்ணோடு கலந்து பூமியின் ஆழத்தில் நிறைந்துவிட்டது. இவ்விதமாக **மர எண்ணெய்**தான் மண் எண்ணெயாக நிலத்திற்குள்ளிருந்து வெளிப்படுகின்றது.

கேள்விகள்

1. மண் எண்ணெய் என்பது என்ன ? அது பூமிக்குள் எவ்விதம் வந்து சேர்ந்தது ?
2. மண் எண்ணெயின் தன்மை என்ன ?
3. மண் எண்ணெய் முக்கியமாக எந்தத் தேசங்களில் கிடைக்கிறது ?

பயிற்சி

ஊற்று—இதைப் பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் உபயோகித்து வாக்கியங்கள் எழுது.

இலக்கணம்

கடைக்குப் போ.—'கு' என்பது நான்காம் வேற்றுமை உருபு.

எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள்.—'இருந்து' என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு.

இராமனுடைய புத்தகம் எது ?

மாட்டினது கொம்பு முறிந்துவிட்டது.—'உடைய', 'அது' என்பன ஆறும் வேற்றுமை உருபுகள்.

பர்மாவில் மண் எண்ணெய் கிடைக்கிறது.

இராமனிடத்தில் ரூபாய் இருக்கிறது.

அவனிடம் கேள்.

'பர்மாவில்', 'இராமனிடத்தில்', 'அவனிடம்'— இவை ஏழாம் வேற்றுமைப் பெயர்ச் சொற்கள். இல், இடத்தில் இவை ஏழாம் வேற்றுமை உருபுகள்.

22. தேசிங்கின் வீரச்செயல்

பாதுஷா	வெகுமதி	மீட்க
நலமாய்	சல்தியில்	அண்டம்
சீனிபோட்டு	புரவி	லகான்
கதுவும்	சிமிட்டா	கப்பம்

முற்காலத்தில் டில்லியை ஆண்டுவந்த பாதுஷாவிடத்தில் ஒரு முரட்டுக் குதிரை இருந்தது. அதனை அடக்கி அதன்மீது சவாரி செய்பவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்றும், ஏற முயன்று தோல்வி யடைபவர்கள் சிறையில் வைக்கப்படுவார்கள் என்றும் பாதுஷா விளம்பரம் செய்திருந்தார். பலர் அக்குதிரையின்மீது ஏற முயன்று தோல்வி யுற்றதால் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுள் செஞ்சிக்கோட்டை அரசனான தேரணிசிங்கும் ஒருவன். இவனுடைய குமாரன் தேசிங்கு தன் தந்தை சிறையில் இருப்பதை அறிந்தான். அக்குதிரையை

அடக்கித்தன் தந்தையை மீட்க விரும்பி டில்லி பாதுஷாவிடம் சென்றான்.

அப்பொழுது பாதுஷா

'ஐயா கேளும், ஐயா கேளும், அறியாத பாலகரே!
எந்த நாட்டிலிருந்து நீரும் இங்கே தேடிவந்தீர்?
உந்தன் ஊரும் பேரும் நாடும் தகப்பன் பேருமே,
நலமாய்ப் பெற்ற தாயின் பேரும் சல்தியில் சொல்லு'
[மென்றான்.
அந்த வார்த்தையைக் காதிலே கேட்டான் அலறும்
[சிங்கம் போல்
'சொல்கிறேன் கேளும், சொல்கிறேன் கேளும், டில்லி
[துரையே நீர்.
தெற்கே வெகுதூரம் இருக்குது செஞ்சிக் கோட்டை
[தான்,
செஞ்சிக்கோட்டை ஆளும் அரசன் தேரணி மகராசன்;

தேரணிராசன் குமாரன் நான்தான் தேசிங்கு
[மகிபாலன்,
ஜல்தி ஜல்தி குதிரையைக் கொணரும் டில்லி
[துரையே நீர் !'

குதிரையிருந்த இடத்திற்கு தேசிங்கு ஓடிச் செல்கிருன்.

ஓடிவந்த ராசனைக்கண்டு, உதைத்து எழுந்தது பார் ;
தேடிவந்த ராசனைக்கண்டு, திகைத்துக் கனைத்தது
[பார் ;
அண்டமிடிந்து விழுந்தாற்போலே அலறிக் கனைத்தது
[பார்.
கோட்டை இடிந்து விழுந்தாற்போலே குலுங்கக்
[கனைத்தது பார்.
அந்த வேளையில் என்ன செய்கிருன் ராசாதேசிங்கு ?
குதிரையைத் தட்டிச் சலாம் வாங்கினுன் கொல்லும்
[சிங்கம்போல்;
தங்கத்தாலே சீனிபோட்டுத் தடவிக் கொடுத்தானும் ;
புலிக்குட்டியைப் போலப் பாய்ந்து புரவி ஏறினுனும் ;
தடதட தடதட தடதட என்று தவிக்குதுபார் குதிரை;
கிட கிட கிட கிட கிட கிட என்று கிளம்பிக் குதிக்குது
[பார் !
லகானை இழுத்துக் கையிலே பிடித்தான் ராசா
[தேசிங்கு.

இந்த நிலையில் தேரணிசிங்கு தன் மகனைக்கண்டு வருந்துகிருன். அப்பொழுது தேசிங்கு சொல்லுதல்

'ஐயா கேளும், ஐயா கேளும், என்னைப் பெற்றவரே,
இன்றைக்கும் சாவு நாளைக்கும் சாவு இருக்குது
[தலைமேலே,

தேசிங்கைக் குதிரையைவிட்டு இறங்கி வரும்படி தந்தை வேண்டுதல்

'ஐந்து வருஷப் பாலனுச்சுதே, அறியா என் மகனே!
குதிரையைவிட்டுக் குதித்துவாடா, குழந்தை என்
[மகனே.

தேசிங்கு குதிரையை ஓட்டுதல்

அந்த மொழியைக் காதிலே கேட்டான் அதிரூப
[தேசிங்கு
கல கல என்று சிரித்தான் ஐயா கதுவும் புலிபோல;
லகானே இழுத்துச் சிமிட்டாக் கொடுத்தான் ராசா
[தேசிங்கு.

குதிரை தேசிங்கைத் தூக்கிக்கொண்டு ஓடினது. கடைசியில் அவனுக்கு வசப்பட்டது. தேசிங்கு பாதுஷாமுன் வந்து குதிரை விட்டிறங்கினுன். எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள். தேசிங்கின் வீரத்தைப் புகழ்ந்தார்கள்.

பாதுஷா அந்தக் குதிரையைத் தேசிங்குக்குப் பரிசாக அளித்தார். இனி செஞ்சிக் கோட்டையிலிருந்து தமக்குக் கப்பம் கட்ட வேண்டாமென்று கூறி, தேரணி சிங்கையும் அவனேடு சிறைப்பட்டிருந்த மற்றச் சிற்றரசர்களையும் விடுவித்தார்.

கேள்விகள்

1. தேரணி சிங்கு யார்? அவன் யாரால் சிறையில் வைக்கப்பட்டான்? ஏன்?

2. தேரணி சிங்கு எவ்விதம் விடுதலை பெற்முன்?

3. தேசிங்கு பாதுஷாவின் குதிரையை அடக்கியது எவ்விதம் ?

பயிற்சி

1. வெகுமதி—இதே அர்த்தம் தரும் வேறு இரண்டு சொற்கள் எழுது.

2. ஏற, தோல்வி, முற்காலம், கடைசி—எதிர்ப்பதம் எழுது.

3. பலர் சிறையில் வைக்கப்பட்டனர், 'சிறையில்—இப்பெயர்ச் சொல்லின் வேற்றுமை கூறு.

23. தல நிர்வாகம்

குடிகள்	பிரதிநிதி	அரசாங்கத்தார்
அம்சம்	தேர்தல்	ஜனப்பிரதிநிதிகள்
ஆட்சி	பகிரங்கமான	அங்கத்தினர்
புரியுமாறு	விளம்பரங்கள்	இணங்கி
தலைவர்	அனுமதி	வசூலிக்கிறார்கள்

"அப்பா, நகரங்களிலும் பெரிய கிராமங்களிலுமுள்ள வீதிகளை நாள்தோறும் சில வேலையாட்கள் சுத்தம் செய்வதைப் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு யார் சம்பளம் கொடுக்கிறார்கள் ?" என்று வெங்கு தன் தந்தையைக் கேட்டான்.

"வெங்கு, நகரத்திலும் பெரிய கிராமத்திலும் உள்ளவர்கள் வீட்டு வரி செலுத்துகிறார்கள். அவ்வரியிலிருந்து அவ் வேலையாட்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது. நகரங்களை

யும் பெரிய கிராமங்களையும் குடிகள் சில அம்சங்களில் தாங்களாகவே ஆட்சிபுரியுமாறு அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டின்படி அந்தப் பிரதேசங்களிலுள்ள குடிகள் சில பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தப் பிரதிநிதிகள் மக்கள் கொடுக்கும் வரிப்பணத்தைக் கொண்டு தெருக்களைச் சுத்தம் செய்தல் முதலிய பொதுக் காரியங்களை நடத்தி வருகிறார்கள்'' என்று தகப்பனார் பதில் சொன்னார்.

''ஜனங்கள் பிரதிநிதிகளை எவ்விதமாகத் தேர்ந்தெடுக்கிறார்கள்?'' என்று வெங்கு கேட்டான்.

''தேர்தல் என்பதைக் குறித்து நீ கேட்டிருக்கிறாயா? நகரங்களிலும் பெரிய கிராமங்களிலும் பகிரங்கமான இடங்களில் எல்லாம் இன்னாருக்கு **வோட்டு** கொடுங்கள் என்று அச்சிட்ட விளம்பரங்கள் ஒட்டியிருப்பதை நீ பார்த்திருக்கலாம். இவ்விதமாக **வோட்டு** அல்லது **வாக்கு** வேண்டுமென்று கேட்பவர்கள் பொது நன்மையைக் கவனித்து நகரசபை, யூனியன் போர்டு முதலிய சபைகளில் ஜனப்பிரதிநிதிகள் ஆவதற்கே பாடுபடுகிறார்கள். இவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைத்தான் **தேர்தல்** என்று சொல்கிறோம். இம்முறைப்படிதான் ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளைத்

தேர்ந்தெடுக்கிறார்கள்'' என்று சொன்னார் தகப்பனார்.

''நகர சபை என்றால் என்ன? அதைக் குறித்துச் சிறிது விவரமாகச் சொல்லவேண்டும்'' என்று கேட்டான் வெங்கு.

''பெரிய நகரங்களில் பொது நன்மைகளைக் கவனிக்க ஏற்பட்டுள்ள சபையை **முனிசிபாலிட்டி** என்று சொல்கிறோம். சென்னைப் பட்டணம் போன்ற மிகப் பெரிய நகரங்களிலுள்ள நகரபரிபாலன சபைக்குக் **கார்ப்பரேஷன்** என்று பெயர். நகர பரிபாலன சபையில் அங்கத்தினராயிருக்கும் ஜனப் பிரதிநிதிகள் அந்த நகரத்திலுள்ள பொதுஜன நன்மைகளைக் கவனிக்கிறார்கள். அவர்களைக் **கௌன்சிலர்கள்** என்று சொல்கிறோம். கௌன்சிலர்கள் **தேர்தல்** முறையால் பொது மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

''கௌன்சிலர்கள் தங்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். முனிசிபாலிட்டி சபைத்தலைவரை **முனிசிபல் சேர்மன்** என்றும், கார்ப்பரேஷன் சபைத் தலைவரை **மேயர்** என்றும் சொல்கிறோம். அங்கத்தினர்களின் அனுமதிக்கு இணங்கித் தலைவர் நகர சபையின் காரியங்களைக் கவனிப்பார். நகரத்தின் எல்லைக்குள் ரஸ்தாக்கள் அமைப்பதும், நகரத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதும்,

பாடசாலைகள் நடத்துவதும், ஆஸ்பத்திரிகள் வைப்பதும், தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துவதும், இரவில் விளக்குகள் ஏற்றுவதும், இன்னும் இவை போன்ற நன்மைகளைச் செய்வதும் நகர சபையின் காரியங்கள். இக்காரியங்களைக் கவனிப்பதற்குச் செலவாகும் பொருளை வீட்டுவரி, தொழில்வரி முதலான வரிகள் மூலமாக வசூலிக்கிறார்கள்'' என்றார் தகப்பனார்.

"பெரிய கிராமங்களிலும் இப்படிப்பட்ட சபைகள் உண்டோ?'' என்று வெங்கு கேட்டான்.

"பெரிய கிராமங்களின் பொதுக் காரியங்களைக் கவனிக்கும் சபையைத்தான் **யூனியன் போர்டு** என்று சொல்லுகிறோம். யூனியன் போர்டுகளிலுள்ள பிரதிநிதிகள் தங்கள் கிராமங்களின் நன்மைகளைக் கவனித்து வருகிறார்கள். யூனியன் போர்டு அங்கத்தினர் கிராம மக்களின் பிரதிநிதிகள் ஆவார்கள். யூனியன் போர்டு, முனிசிபாலிட்டி முதலிய சபைகளை நாம் **தல நிர்வாக சபைகள்** என்று சொல்கிறோம்'' என்றார் தகப்பனார்.

"இப்படிப்பட்ட தல நிர்வாக சபை இன்னும் வேறு உண்டோ?'' என்று வெங்கு கேட்டான்.

"ஒவ்வொரு ஜில்லாவிலும் பொது விஷயங்களைக் கவனிப்பது **ஜில்லா போர்டு.**

இச்சபையும் தல நிர்வாக சபையே ஆகும்'' என்று தகப்பனர் சொன்னர்.

கேள்விகள்

1. தல நிர்வாக சபைகள் எவை ?
2. தேர்தல் என்ருல் என்ன ?
3. முனிசிபாலிட்டி என்ருல் என்ன ?
4. நகர சபை கவனித்து வரும் காரியங்கள் எவை ?
5. நகர சபையார் செலவுக்கு வேண்டிய பொருளை எவ்விதம் வசூலிக்கிருர்கள் ?

பயிற்சி

1. நாள்தோறும், தாங்களாகவே, பாடுபடுகிருர்கள், விவரமாக, தனித்தனி வாக்கியங்களில் உபயோகித்து எழுது.

2. தந்தை, குடிகள், தெருக்கள், நகரம், இடங்கள்—ஒவ்வொரு பெயர்ச்சொல்லும் என்ன பாலிலுள்ளது ?

3. மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிருர்கள்.—இந்த வாக்கியத்திலுள்ள பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு.

இலக்கணம்

'அப்பா, அவர்களுக்கு யார் சம்பளம் கொடுக்கிருர் ?'

அப்பா,—கூப்பிடுதலைத் தெரிவிக்கும் பெயர்ச்சொல். இது எட்டாம் வேற்றுமையில் இருக்கிறது. பெயர்ச் சொல்லில் ஏற்படும் மாறுதல்தான் இதன் உறுப்பு. இதற்குத் தனியான உருபு இல்லை. கூப்பிடுதலை விளிப்பது என்றும் சொல்லலாம். ஆகையால், எட்டாம் வேற்றுமையை விளி வேற்றுமை என்றும் சொல்வர்.

'வெங்கு, நகரத்திலுள்ளவர்கள் வீட்டு வரி செலுத்துகிருர்கள்.'—இதில் விளிவேற்றுமையிலுள்ள பெயர்ச்சொல் எது ?

கீழ்க்கண்ட பெயர்ச்சொற்களின் வேற்றுமைகளைக் கூறு :—

எள்ளை, விதைகளிலிருந்து, தைலங்கள், பெயரால், நமது, பிரதேசங்களில், நிலத்தை, திரவம், ஊற்று, திரவத்தை, ஆங்கிலத்தில், தீ.

24. நோயற்ற வாழ்வு

வற்புறுத்துகிறது	பாய்ந்தது	துர்நாற்றம்
ஜலதாரை	திண்ணம்	சத்தான
சின்னஞ்சிறு	உடற்பயிற்சி	மென்று
அசௌக்கியம்	நீராடுதல்	அமிர்தம்
நஞ்சு	தலையணை	வலிமை

1. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற வாக்கியம் தேக சுகத்தின் அவசியத்தை வற்புறுத்துகிறது. சுத்தத்தைக் கவனியாமல் ஒருவரும் சுகமாக இருக்க முடியாது. நம்முடைய உடம்பும் உடையும் வீடும் சுத்தமாக இருக்க வேண்டும்.

2. நல்ல வீட்டில் அழுக்குத் தண்ணீர் கழிந்து போவதற்கு ஜலதாரைகள் இருக்கின்றன அல்லவா? அப்படியே நமது உடம்பிலிருந்து கழிவான பொருள் வெளிப் படுவதற்காகத் தோல் முழுவதும் சின்னஞ்சிறு ஜலதாரைகளாகிய துவாரங்கள் நிறைந்திருக்கின்றன. வீட்டிலுள்ள ஜலதாரைகள் அடைபட்டுப் போனால், வீட்டிலுள்ளவர்களுக்கு அது அசௌக்கியத்தை உண்டு பண்ணும். அப்படியே அழுக்கு நமது உடம்பிலுள்ள சிறு துவாரங்களை அடைத்து விட்டால், அது நமக்கு அசௌக்கியத்தை உண்டாக்கும்.

3. நமது உடம்பிலிருந்து கழியவேண்டிய பொருள் நஞ்சுத் தன்மை வாய்ந்தது. இது வெளியாகா விட்டால் நோய் உண்டாவது திண்ணம். உடற்பயிற்சி செய்வதாலும், நன்ருக அழுக்கைத் தேய்த்து நீராடுவதாலும், உடம்பிலுள்ள துவாரங்கள் வழியாய்க் கழியவேண்டிய பொருள் கழிந்து கொண்டிருக்கும்.

4. உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்வதுபோல், உடையையும் வெளுத்துச் சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியமாகும். உடையைப்போல் படுக்கையும் தலையணைகளும் சுத்தமாக இருக்க வேண்டும். 'கந்தையானலும் கசக்கிக்கட்டு' என்பது பழமொழி.

5. வீட்டைச் சுற்றி அழுக்கு அடைய இடம் கொடுப்பதும், துர்நாற்றம் வீசும் பொருள்களைக் குவித்திருப்பதும், நோய்களுக்குக் கொண்டாட்டம் ஆகும். படுக்கை அறைகள் சுத்தமாகவும் நல்ல காற்ருேட்டமும் வெளிச்சமும் உள்ளவையாகவும் அமைந்திருக்கவேண்டும். நமது சுக வாழ்வுக்கு நல்ல காற்றும் சூரிய வெளிச்சமும் நல்ல தண்ணீரும் இன்றியமையாதன.

6. இவை தவிர நல்லுணவும் தேகசுகத்திற்கு மிகவும் அவசியமானது. சத்தான

உணவை நன்ருக மென்று உட்கொள்ளுதல் வேண்டும். 'அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் விஷம்' என்னும் வாக்கியத்தை நாம் ஒரு பொழுதும் மறந்துவிடக்கூடாது. பசி நன்ருக ஏற்பட்டபின் உணவு உட்கொள்வதே நலம்.

7. வேலை செய்யாத சோம்பேறிகளுக்கு நல்ல பசி உண்டாவதில்லை. உபயோகிக்கப் பெருத இரும்பு துரு ஏறிக் கெட்டுப்போவது போல் வேலை செய்யாத உடம்பும் நோய் அடைந்து கெட்டுப்போகும். சூரிய வெளிச்சமும் நல்ல காற்ரேட்டமுமுள்ள இடங்களில் நாம் ஒழுங்காக வேலைசெய்து வரவேண்டும். இவ்வாறு செய்வதால் உடல் சுகமும் வலிமையும் பெறும்.

8. பிள்ளைகளே, தேக சுகம் அவசியம் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகத்தான் **சுகாதார வாரம்** நாடு எங்கும் கொண்டாடப் படுகின்றது.

கேள்விகள்

1. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் பழமொழியின் அர்த்தம் என்ன?

2. நன்ருக அழுக்குத் தேய்த்து நீராடவேண்டிய அவசியம் என்ன?

3. 'கந்தை ஆனுலும் கசக்கிக் கட்டு' என்னும் பழமொழி எதை விளக்குகிறது?

4. நாம் வசிக்கும் வீடுகளை எவ்விதம் வைத்துக் கொள்ள வேண்டும்? ஏன்?

5. 'சாப்பிடுதல்' சம்பந்தமாக ஒருவர் கவனிக்க வேண்டிய விஷயங்கள் யாவை?

6. உடற்பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள் என்ன?

பயிற்சி

1. நோயற்ற, அமைந்திருக்கவேண்டும்—பிரித்து எழுது.

2. படுக்கை + அறைகள், நாடு + எங்கும்—சேர்த்து எழுது.

3. உடல் சுகமும் வலிமையும் பெறும்.—இந்த வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

இலக்கணம்

கிளை முறிந்து விழுந்தது.

முறிந்த கிளையை வெட்டினான்.

'விழுந்தது', 'வெட்டினான்'—முற்றுப்பெற்ற அர்த்தத்தைக் கொடுக்கும் வினைச் சொற்கள். ஆகையால் இவை வினை முற்றுக்கள் ஆகும்.

'முறிந்து', 'முறிந்த' இவைகளும் வினைச் சொற்கள் தான். இவற்றில் அர்த்தம் பூர்த்தியாகவில்லை. இவ்விதம் அர்த்தம் பூர்த்தியாகாத வினைச் சொற்களுக்கு எச்ச வினைகள் என்பது பெயர்.

'முறிந்து' என்ற எச்சவினை 'விழுந்தது' என்ற வினைச் சொல்லைக்கொண்டு முடிகிறது. இவ்விதம் வினைச் சொல்லைக் கொண்டு முடியும் எச்ச வினைக்கு வினை எச்சம் என்பது பெயர்.

'முறிந்த' என்ற எச்ச வினை 'கிளையை' என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகிறது. இவ்விதம் பெயர்ச் சொல்லைக்கொண்டு முடியும் எச்சவினைக்குப் பெயர் எச்சம் என்பது பெயர்.

பின்வரும் வாக்கியங்களிலிருந்து வினைமுற்று, பெயர் எச்சம், வினை எச்சம் இவைகளை எடுத்து எழுது:—

1. அவன் வாங்கின கற்பலகை உடைந்தது.
2. கேசவன் பந்தை எடுத்து வீசினான்.

25. எங்கள் உல்லாசப் பிரயாணம்

கரை	காலேக்கடன்	அருந்தி
பொறுப்பு	புள்ளினங்கள்	உறு
தூண்டில்	கும்பல்	சுட்டிக்காட்டி
புதர்	எச்சரித்தார்	எல்லே
எந்திரசாலே	அடுத்துள்ள	வானளாவி
வற்புறுத்தி	கிளேப்பாதை	போக்குவரவு
விபத்து	இணைக்கிறது	பழுதுபார்
பாதசாரிகள்	தென்படுகிறது	பிரதட்சணம்

1. விடுமுறை நாட்களில் எங்கள் பாடசாலே ஆசிரியர்கள் உல்லாசப் பிரயாணங்கள் செய்ய எங்களே அழைத்துச் செல்வதுண்டு. எங்கள் ஊர் ஒரு சிறிய கிராமம். அதன் பெயர் நாரணம்மாள்புரம். அது தாம்பிரவர்ணி நதியின் இடது கரையில் உள்ளது. எங்கள் ஊரிலிருந்து சுமார் மூன்றுமைல் தூரத்திற்கு மேற்கில் தாம்பிரவர்ணி நதியின் இடது கரையிலேயே திருநெல்வேலி பட்டணம் இருக்கிறது. எங்கள் ஊரிலிருந்து பால், தயிர், நெய் முதலிய வற்றைத் திருநெல்வேலிக்குக் கொண்டுபோய் பலர் விற்றுவருவது உண்டு. ஒரு விடுமுறை நாளில் எங்களேத் திருநெல்வேலிக்கு அழைத்துச் செல்ல ஆசிரியர்கள் விரும்பினுர்கள். எங்களில் பலரும் திருநெல்வேலி பட்டணத்தைச் சுற்றிப் பார்த்துவர ஆசை கொண்டோம். ஒரு தினமும் குறிப்பிடப்பட்டது.

2. குறிப்பிட்ட விடுமுறை நாளன்று காலை 7-மணிக்கு நாங்கள் புறப்பட்டு நதிக் கரை யோரமாகவே திருநெல்வேலியை நோக்கி வழி நடக்கலானோம். காலை வேளையானதால் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. நதிக் கரை யோரமாகவுள்ள புல்வெளிகளில் சிலர் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தனர். புள்ளினங்கள் இரைதேடி அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. கொக்கு, நாரை முதலிய பறவைகள் நதியில் ஆழமில்லாத இடங்களில் நின்று தம் இரையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. அப்பொழுது 'ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு' என்ற செய்யுள் அடி எங்கள் நினைப்புக்கு வந்தது. மீன் கொத்திப் பறவைகள் தண்ணீர்ப் பரப்பின் மீதாகப் பறந்து சென்று 'லபக்' என்று தண்ணீரிலிருந்து மீனைப் பற்றிச் செல்வது மிகவும் வேடிக்கையாக இருந்தது.

3. வழியில் கும்பலாகச் சில பனைமரங்களுள்ள இடத்திற்கு வந்ததும் ஆசிரியர்களில் ஒருவர் ஒரு பனைமரத்தைச் சுட்டிக்காட்டி அதைக் கவனிக்கும்படி சொன்னார். என்ன ஆச்சரியம்! அந்தப் பனைமரம் உச்சியில் ஐந்து கிளைகளாகப் பிரிந்திருக்கிறது. எங்கள் ஊருக்கு அருகிலுள்ள இந்த அதிசய மரத்தை

நாங்கள் முதற்தடவையாகப் பார்த்தபொழுது எங்களுக்கு உண்டான சந்தோஷத்திற்கு ஓர் அளவே இல்லை.

4. சுமார் 8-45 மணிக்குப் பட்டணத்தின் எல்லையை அடைந்தோம். இந்தப் பட்டணம் திருநெல்வேலி ஜங்ஷன், திருநெல்வேலி டவுன் என்ற இரண்டு பெரும் பிரிவுகளை உடையதாய் இருக்கிறது. திருநெல்வேலி ஜங்ஷனுக்கு வடபுறத்தில் இரண்டு எந்திரசாலைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று பழைய எந்திர சாலை. அதில் பல வருஷங்களுக்குமுன் பனை வெல்லத்திலிருந்து வெள்ளைச் சர்க்கரை தயார் செய்தார்களாம். இப்பொழுது இத்தொழில் அங்கு நடைபெறவில்லை. ஆனால் இந்த எந்திர சாலைக்குச் சிறிது தூரத்திற்கு மேற்கிலும், தென்னிந்திய இருப்புப்பாதையை யடுத்துமுள்ள எந்திரசாலையில் சர்க்கரை தயார் செய்து வருகிறார்கள். இந்த இரண்டு எந்திர சாலைகளின் புகைக்கூண்டுகளும் வானளாவி நிற்கின்றன.

5. நாங்கள் பழைய எந்திரசாலையினின்று தெற்கு நோக்கி நடந்து வந்தோம். சிந்து பூந்துறை என்னும் பகுதியைத் தாண்டினதும் மதுரைத் திரவியம் தாயுமானவர் ஹிந்து காலேஜ் கட்டிடத்தைக் கண்டோம். அந்தக் காலேஜுக்குக் கிழக்குப் பக்கத்தில் முனிசிபல்

பஸ்-ஸ்டாண்டும் மேற்குப் பக்கத்தில் திருநெல்வேலி சந்திப்பு ரெயில்வே ஸ்டேஷனும் இருக்கின்றன. இந்தச் சந்திப்பிலிருந்து இந்துக்களின் புண்ணியத் தலமாகிய திருச்செந்தூருக்கு ஒரு கிளைப்பாதை பிரிந்து செல்கின்றது.

6. நாங்கள் பஸ்-ஸ்டாண்டைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு சிறிது தூரம் தெற்கே வந்ததும் அந்த ரஸ்தா திருநெல்வேலி ஜங்ஷனின் முக்கிய கடைவீதியைச் சந்திப்பதைக் கண்டோம். அவ்விதம் சந்திக்கு மிடத்தில் ஒரு போலீஸ்காரர் நின்றுகொண்டு போக்கு வரவை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தார். அப்போது தான் ரஸ்தா விதிகளை ஒழுங்காக அனுசரிக்க வேண்டு மென்பதையும், இல்லாவிட்டால் விபத்துக்கள் நேரிடு மென்பதையும் உணர்ந்தோம்.

7. கடைத் தெருவில் பல ஷாப்புகள், மளிகைக் கடைகள், புத்தகக் கடைகள், பழக் கடைகள், ஜவுளிக் கடைகள் முதலியன இருக்கின்றன. நாங்கள் கடைத் தெருவைப் பார்த்துக் கொண்டு திருநெல்வேலி டவுனுக்குப் புறப்பட்டோம். ஜங்ஷனுக்கு மேற்கில் டவுன் இருக்கிறது. இவ்விரண்டு பகுதிகளையும் ஒரு மைல் தூரமுள்ள ஒரு முக்கிய ரஸ்தா இணைக்கிறது.

8. அந்த ரஸ்தாவின் வழியாகப் பல மோட்டார் பஸ்ஸுகள், கார்கள், வண்டிகள், சைக்கிள்கள் முதலியன போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருக்கின்றன. ரஸ்தாவில் போக்கு வரவு அதிகமாதலால் அதை அடிக்கடி பழுது பார்ப்பதைத் தவிர்க்கும் பொருட்டுச் சிமிண்டால் போட்டிருக்கிருர்கள். ரஸ்தாவின் இருபுறங்களிலும் பாதசாரிகள் நடக்கும் பொருட்டு நடை பாதைகள் அமைக்கப் பட்டுள்ளன. நாங்கள் இடது புறமாகவுள்ள நடைபாதை வழியாக நடந்து சென்ருேம். ரஸ்தாவின் இரு ஓரங்களிலும் உயர்ந்து பரந்து வளர்ந்துள்ள மரங்கள் குளிர் நிழலைக் கொடுக்க நாங்கள் களைப்படையவில்லை.

9. ரஸ்தாவின் இரு புறங்களிலும் மரக் கடைகள், இரும்புக் கடைகள் முதலியன இருக்கின்றன. தவிர, சினிமா கொட்டகை, போலீஸ் ஸ்டேஷன், தபாலாபீசு, மாட்டு ஆஸ் பத்திரி, பாங்குகள், ஷேவ்டர் ஹைஸ்கூல், முனிசிபல் ஆபீசு, தாலுகா கச்சேரி, ஆசிரியர் போதனு முறை பயிற்சிப் பள்ளிக்கூடம் முதலியன இருக்கின்றன. இவைகளையடுத்து நெல் வயல்கள் உள்ளன. இவைகளை யெல் லாம் பார்த்துக்கொண்டு டவுன் எல்லையை அடைந்தோம். அங்கு ஓர் அழகான ஆர்ச்சு கட்டப்பட்டிருக்கிறது. அங்கிருந்து வடக்கு

நோக்கினால் நயினார் குளத்தின் கரை தென் படுகிறது.

10. நாங்கள் ஆர்ச்சிலிருந்து மேற்கு நோக்கி வந்து ஒரு மண்டபத்தின் வழியாகச் சென்று நெல்லையப்பர் சுவாமி கோயிலை அடைந்தோம். அக் கோயிலையும் அதை யடுத்துள்ள ஸ்ரீ காந்திமதி அம்பாள் கோயிலையும் சுற்றிப் பார்த்துக் கொண்டோம். இவை பெரிய கோயில்கள். இக்கோயில்களின் கோபுரங்கள் மிக உயரமாயிருக்கின்றன. இக் கோயில்களுக்குறிய தேர்களும் மிகப் பெரியன வாக இருக்கின்றன.

11. பின்னர், நாங்கள் ரத வீதிகளின் வழியாக ஊரைப் பிரதட்சணமாகச் சுற்றி வந்தோம். ரத வீதிகளில், முக்கியமாய் மேற்கு ரத வீதியில் பல வகையான கடைகள் இருக்கின்றன. முனிசிபல் மார்க்கெட்டுக்குள் நுழைந்து அதைப் பார்த்தோம். அங்கு முக்கிய மாய்க் காய்கறி வியாபாரம் தான் நடைபெற்று வருகிறது. அந்த மார்க்கெட்டின் மேற்கு வாசலை யடுத்துள்ள கட்டிடத்தின் மாடியில் முனிசிபல் இலவச வாசகசாலை அமைக்கப் பட்டுள்ளது. அதன் பக்கத்தில் டவுன் போலீஸ் ஸ்டேஷனும், எதிரே முனிசிபல் ஆஸ் பத்திரியும் இருக்கின்றன.

12. கடைசியில் நாங்கள் டவுனுக்கு வட புறத்தில் அமைந்துள்ள நயினர் குளத்தை யடைந்து ஒவ்வொருவரும் கொண்டு வந் திருந்த கட்டுச் சாதம், தோசை, இட்லி, உப்புமா முதலியவற்றை உண்டு, தண்ணீர் குடித்து இளைப்பாறினோம். பின்னர் அவரவர் களுக்கு வேண்டிய தின்பண்டங்கள், சாமான் கள் முதலியன வாங்கிக் கொண்டு மாலையில் சுமார் 4 மணிக்கு ஊரை நோக்கித் திரும்பி னோம்.

கேள்விகள்

1. எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குப் பிள்ளைகள் உல்லாசப் பிரயாணம் செய்தார்கள் ?

2. திருநெல்வேலியின் முக்கியமான இரு பகுதி களுக்கு என்ன பெயர்கள் ?

3. திருநெல்வேலி சந்திப்பு நிலயத்திலிருந்து எவ் விடத்திற்குக் கிளை ரயில் பாதை செல்கிறது ?

4. ஜங்ஷனிலிருந்து டவுனுக்குச் செல்லும் ரஸ்தாவை யடுத்துள்ள முக்கிய ஆபீசுகள், கட்டிடங்கள் எவை ?

பயிற்சி

உங்கள் ஊரைப்பற்றிப் பத்து வரிகள் எழுது.

TB
031(4)
N3
86809

26. கடிதம் எழுதும் முறை

ஆலோசித்து	விளங்காமல்	சிரஞ்சீவி
உள்ளக் கருத்து	கடினமான	க்ஷேமம்
ஒருவாறு	அனுமதி	சமாசாரம்
பாவித்து	தலைப்பு	நல்லொழுக்கம்
பொருள்	மேல்விலாசம்	சௌகரியமாய்

1. கடிதம் எழுதுவதற்கு முன், எழுத வேண்டிய விஷயத்தைக் குறித்து நன்ருக ஆலோசித்து நமது உள்ளக்கருத்தை ஒழுங்கு செய்து கொள்ளுதல் வேண்டும். நாம் யாருக்கு எழுதுகிருேமோ அவர் நம் கண்முன் இருப்பதுபோலப் பாவித்து, அவரோடு பேசுவது போல் கடிதம் எழுதுவதே சிறந்த முறையாகும்.

2. விஷயங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். கடிதம் பெற்றுக் கொள்கிறவர்களுக்குப் பொருள் விளங்காமல் எழுதுவது சரியன்று. கடினமான சொற்களையும் சொற்ருெடர்களையும் உபயோகித்தல் கூடாது.

3. வரிகளின் இடையில் போதுமான இடம் விட்டு எழுத்துக்களைத் தெளிவாக எழுதுதல் வேண்டும். நிறுத்தக் குறிகளை இடம் தெரிந்து அமைப்பது கடிதம் வாசிப்பதை எளிதாக்கும்.

4. ஒருவர் எழுதும் கடிதத்தை அவர் அனுமதியின்றி வேருெருவர் படிப்பது தவ

ருகும். கடிதம் எழுதுவோர் தாம் வசிக்கும் இடத்தையும் தேதியையும் கடிதத்தின் தலைப் பில் குறிப்பது வழக்கம். இதனால் கடிதம் எப் பொழுது எழுதப்பட்டது? எங்கேயிருந்து எழுதப்பட்டது? என்ற விஷயங்களைக் கடிதம் பெற்றுக் கொள்கிறவர் உடனே அறிந்து கொள்ளலாம்.

5. கடிதம் எழுதி முடிந்தபின் அதைச் சரியாக மடித்து உறையிலிட்டு, முத்திரைத் தலை ஒட்டி அனுப்பவேண்டும். மேல் விலா சத்தைத் தெளிவாகவும் சந்தேகத்திற்கு இட மில்லாமலும் எழுதுவது அவசியமாகும்.

6. இந்தப் பாடத்தின் இறுதியிலுள்ள மாதிரிக் கடிதங்களைப் படித்து நீங்கள் கடிதம் எழுதவேண்டிய முறையை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

கேள்விகள்

1. கடிதம் எழுதும்பொழுது கவனித்துக்கொள்ள வேண்டிய விஷயங்கள் யாவை?

2. கடிதம் எழுதுவோர் தாம் வசிக்கும் இடத்தை யும், தேதியையும் கடிதத்தின் தலைப்பில் குறிப்பதால் என்ன நன்மை?

3. கடிதம் எழுதி முடிந்த பின் யாது செய்தல் வேண்டும்?

1. தந்தை மகனுக்கு எழுதும் கடிதம்

மதுரை,
64, மேல மாசி வீதி,
20–10–48.

சிரஞ்சீவி இராமசாமிக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்படி ஆசீர்வதித்து எழுதுவது :

இங்கு யாவரும் க்ஷேமம். உன்னுடைய க்ஷேம சமாசாரங்களைக் குறித்து நீ ஒவ்வொரு வாரமும் எனக்கு எழுதவேண்டும்.

நீ உன் பாடங்களை ஒழுங்காகப் படித்து வருகிருய் என்று எண்ணுகிறேன். ஆசிரியர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்டு, உன் அறிவைப் பெருக்கிக் கொள்வது மிகவும் அவசியமாகும். அறிவுப் பயிற்சியோடு உடற் பயிற்சியும் அவசியம் என்பதை மறந்துவிடாதே. நல்லொழுக்கம் அறிவைக் காட்டிலும் முக்கியமான தென்பதும் உன் நினைவில் இருக்கவேண்டும். மற்றவை பின்.

உனது அன்புள்ள
பாலசுந்தர முதலியார்.

விலாசம் :

ஸ்ரீ. பா. இராமசாமி,
113, துளசிங்கப் பெருமாள் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

2. மகன் தந்தைக்கு எழுதும் கடிதம்

113, துளசிங்கப் பெருமாள் தெரு,
திருவல்லிக்கேணி,
25–10–48.

அன்புமிக்க தந்தை அவர்களுக்கு நமஸ்காரம். தங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

நான் இங்கே சௌக்கியமாய் இருக்கிறேன். தங்கள் தேக சுகத்தையும் தாயார் முதலானோர் சுகத்தையும் அறிய விரும்புகிறேன்.

நான் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் சென்று வாசித்து வருகிறேன். ஆசிரியர் சொல்வதைக் கவனித்தும் வீட்டுப் பாடங்களை நன்ருகப் படித்தும் வருகிறேன். ஆசிரியர் அன்போடு என் சந்தேகங்களை எல்லாம் தெளிவிக்கிருர். சமீபத்தில் வரும் பரீட்சையில் முதல்-தரமாகத் தேர்ந்து விடலாம் என்பது எனது நம்பிக்கை.

அன்புள்ள,
பா. இராமசாமி.

விலாசம் :

மகா-ா-ா-ஸ்ரீ

பாலசுந்தர முதலியார் அவர்கள்,
64, மேல மாசி வீதி, மதுரை.

பயிற்சி

1. உன் தந்தையின் விலாசத்தை எழுதிக் காட்டு.
2. உன் வீட்டில் நடந்த ஏதாவது ஒரு சம்பவத்தைக் குறித்து அயலூரிலிருக்கும் உன் தமையனுக்கு ஒரு கடிதம் எழுது.

27. தந்தையின் அன்பு

(நாடகம்)

மிராசுதார்	கன்றுகாலி	பஞ்ச காலம்
செல்வம்	முதல்தரமான	சோறு படைக்க
உரிமை	பொழுது போக்க	குடிகாரர்
குடும்பம்	கவலை	துன்மார்க்கர்
மதி	விலாப்புடைக்க	கைப்பொருள்
விருத்தி செய்	களிக்கிருர்கள்	மகிழ்ச்சி

காட்சி 1

இடம் :—ஒரு மிராசுதாருடைய வீட்டில் ஓர் அறை.
காலம் :—மாலை நேரம்.
பாத்திரம் :—மிராசுதாருடைய இளைய மகன் முத்து.
(முத்து தன் அறையில் அங்கு மிங்கும் உலாவிக் கொண்டு தானே சொல்லிக் கொள்கிருன்)

எத்தனை நாட்கள் இவ்விதம் காலங் கழிப்பது! நம் செலவுக்குக் காலணு வேண்டுமானுல் தகப்பனையும் தமையனையும் எதிர்பார்த்து நிற்கவேண்டி யிருக்கிறது. நமக்கு என்ன செல்வத்தில் குறைவா? ஏராளமான நிலமும், ஆடு மாடுகளும் ரொக்கமும் இருக்கின்றன. அப்படி யிருந்தும் நாம் நமது இஷ்டப்படி செலவழிக்க முடியாமலன்ருே இருக்கிறது! நாம் நமது பாகத்தைப் பிரித்துக்கொண்டு வேறு இடம் சென்ருல்தான் நம் இஷ்டப்படி தமாஷாக இருக்க முடியும். உம், ஆகட்டும், இன்றே பிரித்துக் கொடுக்கும்படி என் தந்தையைக் கேட்கிறேன்.

(தந்தையிடம் செல்கிருன்)

காட்சி 2

இடம் :—மிராசுதாருடைய வீடு.
காலம் :—இரவு.
பாத்திரங்கள் :—மிராசுதார், முத்து.

முத்து : தந்தையே, நமஸ்காரம்.

மிராசுதார் : அப்பா, வா, ஏது இன்று முழுவதும் ஒரு மாதிரியாக இருக்கிறாய் ?

முத்து : மாதிரி என்ன, மாதிரி. எனக்கு இந்த வீட்டில் இருக்கக் கொஞ்சமும் பிடிக்க வில்லை.

மிராசுதார் : ஏன் அப்பா ?

முத்து : ஏனா ? எவ்வளவு செல்வமிருந் தும் என்ன ! செலவுக்கு ஏதாவது காசு வேண்டுமானால் நான் உங்களிடமாவது தமைய னரிடமாவது பல்லைக் காட்டிக் கேட்க வேண்டி யிருக்கிறது. நீங்கள் கொடுத்தால் உண்டு. இல்லாவிட்டால் ஆண்டியாக நிற்கவேண்டி யதுதான்.

மிராசுதார் : அப்பா, நீ பணம் கேட்ட பொழுது எப்பொழுதாவது நாங்கள் இல்லை என்று சொன்னதுண்டா ?

முத்து : ஓஹோ ! இல்லை என்று சொல்ல உங்களுக்கு என்ன உரிமை ? என் பங்குக்கு வரும் சொத்துக்களைப் பிரித்துக் கொடுங்கள். உங்களை எதிர் பார்த்துக் காலங்கழிக்க இனி மேல் என்னால் முடியாது.

மிராசுதார் : அப்பா, அவசரப்படாதே. நாம் ஒரே குடும்பமாக இருந்தால் மற்றவர் நம்மை மதிப்பார்கள். நாமும் நமது சொத்தை விருத்தி செய்யமுடியும்.

முத்து : விருத்தி செய்தது எல்லாம் போதும். இனி ஒரு க்ஷணமும் இந்த வீட்டில் தங்க மாட்டேன் ; என் பாகத்தைப் பிரித்துக் கொடுத்து விடுங்கள்.

மிராசுதார் : சரி, உன் இஷ்டப்படியே பாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிடுகிறேன்.

(மிராசுதார் முத்துக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடுக்கிறார். அவன் தன் நிலத்தையும் கன்றுகாலிகளை யும் விற்கிறான். ஏராளமான பணத்தை எடுத்துக்கொண்டு தூரதேசம் செல்கிறான்.)

காட்சி 3

இடம் :—முத்து வசிக்கும் பங்களா.

காலம் :—முன் இரவு.

பாத்திரங்கள் :—முத்துவும், அவனுடைய சிநேகிதர் களும். (விருந்துக்குச் சிநேகிதர்கள் வந்து கொண்டிருக் கிறார்கள்.)

ஒரு சிநேகிதர் : (முத்துவை நோக்கி) என்ன ஸார், நான் கொஞ்சம் தாமதமோ ?

முத்து : இல்லை, இல்லை, சரியான நேரத் திற்கு வந்து விட்டீர்கள். விருந்துச் சாப்பாடு தயாராவதற்குத் தான் சிறிது நேரமாய் விட்டது.

வேலையாள் : (முத்துவை நோக்கி) எஜமான், சாப்பாடு தயார். எல்லோரும் உட்காரலாம்.

முத்து : எல்லாரும் வாருங்கள். சாப்பிட உட்காருவோம்.

(எல்லாரும் சாப்பிடுகிறுர்கள்)

முத்து : (ஒரு சிநேகிதரை நோக்கி) என்ன ஸார், சமையல் எப்படி ?

சிநேகிதர் : வெகு நேர்த்தி, முதல் தரமான சமையல்.

முத்து : என்னமோ, ஸார். இந்த ஊருக்கு வந்த பிறகுதான் இவ்வளவு தமாஷ் எல்லாம்.

சிநேகிதர் : இது சௌகரியமான ஊர், ஸார், தமாஷாகப் பொழுது போக்குவதற்குத் தகுந்த ஊர். கவலை என்பதே ஏற்படாது.

முத்து : உங்களைப் போன்ற சிநேகிதர்கள் இருக்கும்பொழுது எனக்குக் கவலை எப்படி ஏற்படும் ?

(வேலையாளை நோக்கி யார் யாருக்கு என்ன வேண்டுமென்று விசாரிக்கச் சொல்கிருன். எல்லோரும் விலாப் புடைக்கச் சாப்பிடுகிறுர்கள். ஆடிப்பாடிக் களிக்கிறுர்கள்.)

காட்சி 4

இடம் :—ஒரு மைதானம்.

காலம் :—மத்தியான வேளை.

பாத்திரங்கள் :—முத்து, ஒரு குடியானவன்.

(முத்து ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்திருக்கிறுன். அவனுக்கு முன்னுல் ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. ஆடுகளின் சொந்தக்காரனுன குடியானவன் வருகிறுன்.)

குடியானவன் : (முத்தை நோக்கி) அடே, மடையா, ஆடுகளை நன்ருக மேய்க்கிருய் ! மரத் தடியில் குற்றுக்கல்போல் உட்கார்ந்திருக் கிருயே ? ஆடுகளை ஓநாய் கீநாய் தூக்கிக் கொண்டு போனல் என்ன செய்வாய் ?

முத்து : ஐயா, பசி தாங்கமுடியவில்லை. கண்கள் இருள் அடைகின்றன. ஆதலால் சற்று இளைப்பாறுவோம் என்று இப்பொழுது தான் உட்கார்ந்தேன்.

குடியானவன் : ஓகோ, பன்னிரண்டு மணிக்கே பசிக்கிறதோ ! ஆடுகளைக் கவனமாக மேய்த்துக் கொண்டு மாலையில் வீட்டுக்கு வா. மாலையில்தான் உனக்குக் கஞ்சி ஊற்றப்படும். இந்தப் பஞ்ச காலத்தில் உனக்கு வேளைக்கு வேளை சோறு படைக்க யாரால் முடியும் ?

(குடியானவன் போய்விடுகிருன்)

முத்து : (தனக்குள்) ஐயோ, குடிகாரர் களோடும் துன்மார்க்கர்களோடும் சேர்ந்து இரண்டு வருஷங்களுக்குள் கைப்பொருள் முழுவதையும் தொலைத்தேன். அற்ற குளத் தில் அறும் நீர்ப்பறவை போல் அத்துன்மார்க் கர்கள் என் கைப் பொருள் காலியானதும் என்னை விட்டகன்றனர். தந்தை சொல் கேளாததால் அன்ருே என் கதி இவ்வாறு ஆயிற்று. என் தந்தையாரிடமுள்ள வேலையாட் கள் நல்ல உணவு வேளை தவருமல் உண்டு

கொண்டிருக்க, நான் இப்பொழுது ஒரு வேளைக் கஞ்சிக்குக் காத்திருக்க வேண்டியிருக்கிறதே! ஆ, தெய்வமே, இதுவும் உன் சோதனையோ? (சிறிது நேரம் யோசிக்கிருன்.) சரி, நம் தந்தையிடம் செல்வோம். அவரைக் கெஞ்சிக் கேட்டு அவருடைய வேலையாட்களில் ஒருவனுகவாவது இருந்து காலங்கழிப்போம்.

(ஆடுகளை ஓட்டிக்கொண்டு போய்ச் குடியானவனிடம் ஒப்புவித்துவிட்டுத் தன் சொந்த ஊருக்குத் திரும்புகிருன்.)

காட்சி 5

இடம் :—மிராசுதாரின் வீடு.

காலம் :—மாலை வேளை.

பாத்திரங்கள் :—மிராசுதார், முத்து, வேலையாட்கள்.

(மிராசுதார் வீட்டுவாசலில் இருக்கிருர். முத்து வருகிருன்.)

மிராசுதார் : ஆ, அது யார்? நமது இளைய மகனைப்போல் காணப்படுகிருனே?

(கண்களைத் துடைத்துக்கொண்டு)

ஆ, நமது இளைய மகன்தான் போலும்! என்ன இவ்விதம் இருக்கிருன்?

முத்து : (தந்தையை வணங்கிக்கொண்டு) தந்தையே, என்னை மன்னிக்க வேண்டும். தங்கள்சொல் கேளாததால் இக்கதி அடைந்தேன். நான் பாவி, உங்கள் மகன் அல்லன்.

தாங்கள் என்னை ஒரு வேலைக்காரனாக ஏற்றுக் கொண்டு ஆதரிக்க வேண்டும்.

மிராசுதார் : (எழுந்து மகனைக் கட்டித்தழுவி) அப்பா, வருத்தப்படாதே. எல்லாம் அவன் செயல். போனது போகட்டும். இனிமேல் எங்களுடன் இருந்து சுகமாக வாழ்ந்து வா.

(வேலையாட்களை நோக்கி) சிறிய எஜமானனுக்கு ஸ்நானம் செய்வித்து, உடுக்கப் பட்டாடைகளையும், உண்ண நல்ல உணவையும் கொடுங்கள்.

(மிராசுதார் பெரிய விருந்து நடத்தி மகிழ்ச்சி கொண்டாடுகிறார்.)

கேள்விகள்

1. சொத்துக்களைப் பிரித்துக் கொண்டதும் முத்து என்ன செய்தான் ?
2. முத்து தன் செல்வத்தை இழக்கக் காரணம் என்ன ?
3. இக்கதையிலிருந்து நீ அறிவது என்ன ?

வியாசம் எழுதல்

தபால் பெட்டியைப்பற்றி நீயும் உன் தம்பியும் சம்பாஷித்துக் கொள்வது போல வியாசம் எழுது.

பயிற்சி

1. தமையன், எஜமானன்—பெண்பால் எழுது.
2. மூத்த மகள்—எதிர்ப்பதம் எழுது.
3. எல்லாம் அவன் செயல். இந்த வாக்கியத்தில் ' அவன் ' என்னும் சொல் யாரைக் குறிக்கிறது ?

செய்யுட் பகுதி

1. கடவுள் வணக்கம்

ஆதி யானை அமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை உணர்தற் கரியதோர்
சோதி யானைக்கண் டீர்தொழற் பாலதே.

—தேவாரம்

2. வெற்றிவேற்கை

(1) இதற்கு இது அழகென்பது

1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
2. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
3. மன்னர்க் கழகு செங்கோல் முறைமை.
4. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
5. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
6. உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்.
7. உண்டிற் கழகு விருந்தோ டுண்ணல்.
8. வணிகர்க் கழகு வளர்பொருள் ஈட்டல்.
9. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
10. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.

(2) கல்வியின் உயர்வு

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கற்கை நன்றே கற்கை நன்றே
   பிச்சை புகினும் கற்கை நன்றே.
3. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
   நெல்லினுட் பிறந்த பாரத கும்மே.
4. நாற்பாற் குலத்தில் மேற்பா லொருவன்
   கற்றில னுயிற் கீழ்இருப் பவனே.
5. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
   அக்குடிக் கற்றோரை வருக என்பர்.
6. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.

(3) நட்பு

1. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
2. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
3. அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.
4. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
5. கலக்கினும் தன்கடல் சேறாகாதே.
6. அடினும் பால்பெய்து கைப்பறாது பேய்ச்சுரைக்காய்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது.
7. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
8. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

(4) இவர்க்கிது இல்லையென்பது

1. யானைக்கில்லை தானமும் தவமும்.
2. பூனைக்கில்லை தவமும் தயையும்.
3. ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.
4. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
5. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
6. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

(5) இன்னார் பதரென்பது

1. முதலுள பண்டம் கொண்டு வாணிபஞ் செய்து
அதன் பயன் உண்ணா வணிகரும் பதரே.
2. வித்தும் ஏரும் உளதாயிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.
3. தன் ஆயுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கைக் கொடுக்கும் பேதையும் பதரே.

(6) செல்வம் நிலையாமை

1. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
2. குடை நிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்.
3. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
4. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசரோ டிருந்து அரசாளினும் ஆளுவர்.
5. குன்றத் தனையிரு நிதியம் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
6. எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும்.
7. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

(7) நீதி செலுத்தும் முறை

1. வாய்ப்பாறையாகவும் நாக்கடிப்பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக்கேண் மின்.
2. பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே.
3. மெய்யுடை யொருவன் சொல்மாட்டாமையால்
பொய்போலும்மே பொய்போலும்மே.
4. இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையாராயின்
மனுநெறி முறையின் வழக்கிழந்தவர்தம்
மனமுற மறுகிநின்று அழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா குமே.

3. வாக்குண்டாம்

நல்லார்க்குச் செய்த உபகாரம் பலன் தரும்

நன்றியொருவருக்குச் செய்தக்கால், அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா ;—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். 1

நல்லார் நட்பு நன்று

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே ;—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று. 2

தீயார் நட்பு தீது

தீயாரைக் காண்பதுவும் தீதே ; திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே ;—தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே ; அவரோடு
இணங்கி யிருப்பதுவும் தீது. 3

கல்லாதவன் மரத்துக்கு ஒப்பாவான்

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் ;—அவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம். 4

கல்லாதவன் சொன்ன கவியின் தன்மை

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானுமதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 5

4. நல்வழி

நல்ல குடியிற் பிறந்தார் தன்மை

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் ;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராளுலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 1

பிச்சை யெடுப்பதன் இழிவு

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை :—சிச்சீ !
வயிறு வளர்க்கைக்கு மான மழியாது
உயிர்விடுகை சாலவுறும். 2

ஓரம் சொல்வார் அடையும் கதி

வேதாளஞ் சேருமே ; வெள்ளெருக்குப் பூக்குமே ;
பாதாள மூலி படருமே ;—மூதேவி
சென்றிருந்து வாழ்வாளே ; சேடன் குடிபுகுமே ;
மன்றோரஞ் சொன்னார் மனை. 3

வரவுக்கு அதிகம் செலவு செய்பவன் அடையும் கதி

ஆனமுதலில் அதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 4

ஈசன் திருவுள்ளப்படி காரியம் நடைபெறுதல்

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும் ;
அன்றி அதிவரினும் வந்தெய்தும் ;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும் ;
எனையாளும் ஈசன் செயல். 5

5. குமரேச சதகம்

பிதாக்கள்

தவமதுசெய் தேபெற்றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவனொரு பிதா
தயையாக வித்தையைச் சாற்றினவ னொருபிதா
சார்ந்தசற் குருவொரு பிதா.

அவமறுத் தாள்கின்ற அரசொரு பிதா நல்ல
ஆபத்து வேளை தன்னில்
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொரு பிதா
அன்புளமு ளோனொரு பிதா.

கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா
கலிதவிர்த்தவ னொரு பிதா
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
கருதுவது நீதி யாகும்.

மவுலிதனின் மதியரவு புனைவிமல ருதவுசிறு
மலையென வருகுரு பரா
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

—குருபாத தாசர்

6. தனிப் பாடல்கள்

பழக்கமும் பிறவிக் குணமும்

சித்திரமும் கைப்பழக்கம் ; செந்தமிழும் நாப்பழக்கம் ;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் ;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் ; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம் 1

நெசவுத் தொழில்

செய்யுந் தொழிலனைத்துஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை ;—வையகத்தில்
தெள்ளு தமிழ்வேதஞ் செப்பி அந்நாள் சீர்படுத்தும்
வள்ளுவனார் கொண்டதல்ல வா ? 2

ஆதிசேடன்

சென்றால் குடையாம் ; இருந்தால்சிங் காதனமாம் ;
நின்றால் மரவடியாம் ; நீள்கடலுள்—என்றும்
புணையாம் ; மணிவிளக்காம் ; பூம்பட்டாம் ; புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு. 3

உழவுத்தொழில்

ஏரும் இரண்டுளதாய், இல்லத்தில் வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்,—ஊருக்குச்
சென்றுவர அண்மையதாய்ச், செய்வாரும் சொற்
என்றும் உழவே இனிது. [கேட்டால் 4

விகடராமனின் குதிரை

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி. 5

7. புத்தியில்லா ஆமை

விகடசங் கடமென்னும் அன்னத்தோடே
மேவுகம்புக் கிரீவன் என்னும் ஆமை முன்னர்
சுகமுடனே ஒரு குளத்தில் அநேக நாளாத்
தோழமையாய் இருக்க மழை சொரிவிலாமல்
அகல்குளமும் புனல்வற்றிப் போகை யாலே,
அப்புறம் ஓர் குளம்நாடிப் போக அன்னம்
பகரரிய ஆமைதனை அழைத்து "இக் கோலைப்
பற்றிவாய் திறவாதே வருக" என்றே,
இருபுறமும் தாங்கள் கவ்விக் கொண்டு வானில்
எழுந்துபறந் ததுகொடுபோம் வழியிற்கண்டோர்,
கருதி இது புதுமையென நகைத்து நின்று
கைகொட்டிப்பார்க்க, அந்தக் கபடனும்
மருவுநகை ஏதென்று கேட்க எண்ணி,
வாய்திறந்து கீழ் வீழ்ந்து மடிந்து போனர் ;
ஒருமையுளார் சொன்னதுகே ளாதபேர்கள்,
உறுங்கருமம் இவ்வாறென் றோதிப் பின்னும்

பயிற்சி

கதைப் பாட்டை மனத்திற்குள் படித்த பிறகு கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதில் எழுது :—

1. குளத்தில் எத்தனை அன்னங்கள் வசித்தன ?
2. அவற்றின் பெயரென்ன ?
3. அவை எதனுடன் தோழமையாய் இருந்தன ?
4. அந்த ஆமையின் பெயர் என்ன ?
5. அன்னங்கள் வேறு குளத்திற்குப் போக விரும்பியது ஏன் ?
6. அவை ஆமையிடம் என்ன சொல்லின ?
7. அவை ஆமையை எவ்விதம் எடுத்துச் சென்றன ?
8. வழியில் என்ன நேரிட்டது ?
9. இக் கதையிலிருந்து நீ அறியும் நீதி என்ன ?

குறிப்புரை

1. கடவுள் வணக்கம்

ஆதியான் - முதற் கடவுள். அமரர் - தேவர். நியம நெறிகள் - வேதங்கள். ஓதியான் - சொன்னவன். உணர் தற்கு - அறிவதற்கு. அரிய - அருமையான, சோதியான் - பிரகாசமுடையவன்.

2. வெற்றிவேற்கை

இந்த நூலை இயற்றியவர் அதிவீர ராம பாண்டியர். இவர் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் தென்காசியி லிருந்து சிற்றரசராக ஆண்டுவந்தார்.

1. கசடு அற - குற்றம் நீங்க. கிளை - சுற்றத்தார், உறவினர். செங்கோல் - நீதியுடன் அரசாளுவது. வரும் பொருள் - மேல் வரும் காரியங்கள். தந்திரி - சேனைத் தலைவன். தறுகண் - சண்டையில் பயப்படாத. ஆண்மை - வீரம். ஈட்டல் - தேடுதல். வறியோர் - தரித்திரர், வறுமை - தரித்திரம். செம்மை - நல்லொழுக்கம் கெடா திருத்தல்.

2. இறைவன் - கடவுள். கற்கை - படித்தல். பிச்சை புகினும் - பிச்சை எடுத்தாலும். குல நலம் - குலத்தின் பெருமை, பதர் - பயிர்ச்சாவி.

3. சுவை - ருசி. ஒளி - பிரகாசம். அறுது - குறை யாது. கார் - கருமையான. அகில் - கட்டை. பொல் லாங்கு - துர்நாற்றம். கமழாது - வீசாது. தண் - குளிர்ச்சி பொருந்திய. கைப்பு - கசப்பு. விரை - வாசனை. கமழாது - நல்ல வாசனை வீசாது. கேண்மை - சிநேகம். இரு நிலம் - பெரிய பூமி. வேர் வீழ்க்கும் - நிலைபெறும். வேர்க் கொள்ளாது - நிலைபெருது.

4. நாணம் - வெட்கம். கேளும் கிளையும் - நட்பின ரும் உறவினரும். நலிந்தோர் - வறியர், தரித்திரர்.

5. எய்த்து - சோம்பி. பேதை - அறிவில்லாதவன்.

6. உடைமை - செல்வம். குஞ்சரம் - யானை. நண்ணினும் - சேர்ந்தாலும். அறக் கூழ்ச்சாலை - அன்னம் போடப்படும் சத்திரம். இரப்போர் - யாசிப்பவர், பிச்சையெடுப்பவர். இரு நிதியம் - ஏராளமான பொருள். மாடம் - மாளிகை. கால்சாய்ந்து - அடியோடு சாய்ந்து. உக்கு - நொருங்கி. பெற்றம் - மாடு. பொற்றொடி - தங்கத்தால் செய்த வளையலை அணிந்த. செறிந்து - நிறைந்து. நெற்பொலி - நெல் அம்பாரம்.

7. பறை - மேளம். அடிப்பு - அடிக்கும் கோல். சாற்றுவது - சொல்வது. போற்றிக் கேண்மின் - கவனமாகக் கேளுங்கள். சொல்வன்மை - சொல்லும் திறமை. மெய் - உண்மை. பொருந்த - ஒப்புக்கொள்ளும்படி. மனம் உறமறுகி நின்று - மனம் மிகவும் கலங்கி நின்று. வழி வழி - சந்ததிதோறும், ஈர்வது - அறுப்பது.

3. வாக்குண்டாம்

இந்த நூலை இயற்றியவர் ஔவையார். இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த பெண்புலவர் ஆவர். இவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி முதலிய நூல்களை இயற்றியுள்ளார். வாக்குண்டாம் என்னும் நூலில் கடவுள் வணக்கச் செய்யுள் 'வாக்குண்டாம்' என்று ஆரம்பமாவதால் இந்நூலுக்கு இப்பெயர் ஏற்பட்டது. இந்நூல் பெரும்பாலும் பழமொழிகளைத் தழுவி எழுதப்பட்டது. இந்நூலுக்கு மூதுரை என்ற பெயரும் வழங்குகிறது.

1. நன்றி - உபகாரம். நின்று - நிலைபெற்று. தளரா - சோர்வு அடையாமல். தாள் - அடி. தெங்கு - தென்னை.

2. நல்லார் - நற்குணமுடையவர். நன்று - நல்லது. நலம் - நன்மை. உரைப்பது - சொல்வது. இணங்கியிருப்பது - நட்பாயிருப்பது.

3. தீயார் - கெட்ட குணமுடையவர். தீது - தீமையே ஆகும்.

4. கவை - கிளை. கொம்பு - மரக்கொம்பு. காட்டகத்து - காட்டில். அவை - சபை. நீட்டு ஓலை - கொடுக்கப்பட்ட ஓலையில் (புத்தகத்தில்) எழுதியிருப்பதை. குறிப்பு - கருத்து. நன் - நல்ல.

5. கானம் - காடு. பாவித்து - நினைத்து. பொல்லா - அழகில்லாத. கவி - பாட்டு.

4. நல்வழி

இந்நூல் ஔவையாரால் இயற்றப்பட்டது. இதில் காப்புச்செய்யுள் உட்பட 41 செய்யுட்கள் உண்டு.

1. பெருக்கு - வெள்ளம். அடி - பாதம். உலகு - உலகிலுள்ள மக்கள். ஏற்றவர்க்கு - யாசிப்பவர்க்கு. நல்கூர்ந்தாராலும் - தரித்திரமடைந்தாலும்.

2. மூத்த - (இழிவில்) பெரிய. பேசுங்கால் - சொல்லுமிடத்து. இச்சை - விருப்பமான சொற்கள். இடித்துஉண்கை - நெருங்கி வாங்கி உண்பது. சால - மிகவும். உறும் - பொருந்தும்.

3. வேதாளம் - பேய். பாதாள மூலி - ஒருவகைக் கொடி. சேடன் - பாம்பு. மன்று - நியாய சபை. ஓரம் - பட்சபாதம்.

4. மதி - புத்தி. தீயனாய் - பாவமுடையவனாகி. பொல்லனாம் - பொல்லாதவனாவான்.

5. ஒழிந்திட்டு - கிடையாமல். வந்து எய்தும் - கிடைக்கும். ஈசன் - கடவுள். செயல் - செய்கை.

5. குமரேச சதகம்

இந்நூலை இயற்றியவர் - குருபாத தாசர் என்பவர். தயையாக - கிருபைகொண்டு. சாற்றினவன் - கற்பித்தவன். அவமறுத்து ஆள்கின்ற - கஷ்டங்களைப் போக்கி

அரசாள்கின்ற. உற்ற துயர் - ஏற்பட்ட துன்பம். கவளம் - சோற்றுத்திரளை. கலி - துன்பம், சிறுமை. தவிர்த்தவன் - நீக்கியவன். காசினி - பூமி. மதி - சந்திரன். அரவு - பாம்பு. புனை - தரித்த. விமலர் - சிவன். மதலை - மகன், குழந்தை.

6. தனிப்பாடல்கள்

1. நட்பு - சினேகம், கொடை - ஈகை.

2. சீர் தூக்கி - ஆராய்ந்து. நிகரில்லை - ஒப்பானது இல்லை. வையகம் - பூமி. தமிழ் வேதம் - திருக்குறள். செப்பி - சொல்லி. வள்ளுவனார் - திருவள்ளுவர்.

3. நீள் கடல் - பெரிய கடல். புணை - தெப்பம். புல்கும் - பொருந்தும். அணை - மெத்தை, படுக்கை. திருமால் - மகாவிஷ்ணு.

4. இல்லம் - வீடு. அண்மை - சமீபம்.

5. காதம் - ஏழரை நாழிகை வழிதூரம், அதாவது மூன்று மணி நேரத்தில் செல்லும் தூரம், சுமார் பத்து மைல். கடிவாளம் - குதிரையின் வாய்வடம். மன் - பெருமை பொருந்திய.

7. புத்தியில்லா ஆமை

இக்கதைப்பாட்டு ‘பஞ்ச தந்திரம்’ என்னும் நூலில் உள்ளது. அந்த நூலில் ஐந்து உபாயங்கள் சொல்லப் பட்டிருப்பதால் அந்நூலுக்கு இப்பெயர் ஏற்பட்டுள்ளது. இந்நூலை இயற்றியவர் வீரமார்த்தாண்ட தேவர்.

தோழமையாய் - சினேகமாய். அகல் - அகன்ற. புனல் - தண்ணீர். நாடி - தேடி. பகரரிய - சொல்வதற்கு அருமையான. வான் - ஆகாயம். நகைத்து - சிரித்து. நகை - சிரிப்பு. மடிந்து - இறந்து. ஒருமை - ஒற்றுமை. உறுங்கருமம் - மேற்கொள்ளும் காரியம்.

86809

NELLAI TAMIL VACHAGAM

BOOK IV

By

Vidwan P. Arumuga Perumal

S. R. SUBRAMANIA PILLAI

PUBLISHERS — TINNEVELLY JN.

0-8-0